
# கல்வெட்டு

## KALVETTU


திருவள்ளுவராண்டு 2037 (விய ஆண்டு) ஆடித்திங்கள்





பள்ளிக் கல்வி அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களால்
8.7.2006 அன்று கல்வெட்டு இதழ் :70, சிறப்பிதழாக வெளியிடப்பட்டது.

கல்வெட்டு - காலாண்டிதழ் : 71 (ஜூலை 2006) விலை ரூ.10.00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

00067



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையில் தொல்பொருட்களைப் பார்வையிடுதல் (செய்தி பக்கம் : 23)



27.6.2006 அன்று நிகழ்ந்த திங்கட்சொற்பொழிவு (செய்தி பக்கம் : 27, 28)

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை முதன்மை ஆணையர் முனைவர் சீதாராம் குருமூர்த்தி அவர்கள் சார்பாக கல்வெட்டாய்வாளர் திரு.கி.சு.சம்பத் அவர்களால் வெளியிடப்படுகிறது.

**முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப.,**
முதன்மை ஆணையர்
தொல்லியல் துறை

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஹால்ஸ் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.
22-11-2006

# பதிப்புரை

தமிழகத்தின் தொல்லியல் சிறப்பினைக் காட்டும் சான்றுகள் தமிழகமெங்கும் சிற்றூர்களில் பரவிக் கிடக்கின்றன. தேடலும் ஆய்வும் பன்முகப்படும்போது இவை நாள்தோறும் வெளிப்பட்டு எண்ணற்ற தொல்லியல் செய்திகளைத் தருகின்றன. அவ்விதம் அண்மையில் வெளிப்பட்ட செய்திகளில் சில இக்கல்வெட்டுக் காலாண்டிதழ்-71ல் வெளியிடப்படுகின்றன. இத்துறையில் இளநிலையில் பணி யாற்றும் இளம் ஆய்வாளர்களின் கட்டுரைகள் இவ்விதழில் மிகுதியாக உள்ளன.

தமிழின் தொல்லெழுத்தமைதிக்கும், தமிழக மருத்துவ வரலாற்றுக்கும் அணிசேர்க்கும் செய்தி முதல் கட்டுரையாக இடம் பெறுகிறது. இடைக்காலத் தமிழகத்தில் பல வணிகக் குழுக்கள் தோன்றி பொருளாதார - சமூகக் கட்டுக் கோப்பில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. அவ்வகையில் ரிஷிவந்தியம், மல்லசமுத்திரம், மதுராந்தகம், கோட்டைப்பட்டி முதலான இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. புடைப்புச் சிற்பங்களும் இக்கல்வெட்டுக்களுடன் இடம் பெற்றிருப்பது சிறப்பாகும்.

பண்டைய தமிழகத்தில் செய்தி ஊடகங்கள் இல்லாத நிலையில் நீதி ஊட்டும் இதிகாசக் கதைகள் ஊர் அம்பலங்களில் இராக்காலங்களில் வாசிக்கப் பட்டு மக்களைச் சென்றடைந்தன. சோழர் காலத்தில் காஞ்சிபுரம் அடுத்த பிச்சிவாக்கத்தில் இருந்த ஒரு அம்பலம் குறித்த செய்தியும் அறியப்பட்டுள்ளது. ஏற்கனவே அறியப்பட்ட திருமலைநாயக்கர் அரண்மனை ஓவியம், தற்பொழுது புலிவலத்தில் அறியப்பட்டுள்ள தஞ்சை பெரிய கோயில் சோழர்கால ஓவியம் ஒத்த ஓவியங்கள் குறித்த செய்திகளும் இடம் பெறுகின்றன.

பள்ளிக்கல்வி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள் இத்துறைக்கு வருகை புரிந்து சிறப்புச் செய்த செய்தியும் இடம் பெறுகிறது.

இவ்விதழை எனக்கு முன் இத்துறைப் பொறுப்பில் இருந்த சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. நிரல் செய்ததற்கிணங்கக் கல்வெட்டாய்வாளர் திரு. கி. சு. சம்பத் தொகுத்தமைத்துள்ளார். அவருக்கும் இவ்விதழ் வடிவம் பெற உதவிய முனைவர் சு. இராசகோபால் கல்வெட்டாய்வாளருக்கும் இத்துறை அச்சுப்பிரிவினர்க்கும் பாராட்டுக்கள்.

**சீதாராம் குருமூர்த்தி**
முதன்மை ஆணையர்

உள்ளே . . . பக்கம்


பதிப்புரை

1. பல்லவர் கால அரசவை மருத்துவர் 1
— கு. குமரவேல்

2. ரிஷிவந்தியம் வணிகத்தளக் கல்வெட்டு
— மே. சீனிவாசன் 2

3. மல்லசமுத்திரம் சித்திரமேழிக் கல்வெட்டு
— ச. செல்வராஜ் 5

4. திண்டமங்கலம் கல்தொட்டிகள்
— ச. செல்வராஜ் 7

5. சித்திரமேழி நந்தவனம்
— க. ஈஸ்வரன் 8

6. திருப்பாலைப்பந்தல் பாண்டியர் கல்வெட்டு
— ஆர். கே. சேட்டு 9

7. அனந்தமங்கலம் கல்வெட்டுகள்
— த. புருஷோத்தமன் 10

8. ஓடுக்கத்தூர் நடுகற்கள்
— த. புருஷோத்தமன் 11

9. பிச்சிவாக்கம் கல்வெட்டுச் செய்திகள்
— பொ. கோ. லோகநாதன் 14

10. பொன்னை வாய்க்கால் ஒப்பந்தக் கல்வெட்டு
— ப. பூபாலன் 17

11. வல்லவன்கோட்டை சமணப்பள்ளிக் கல்வெட்டுகள்
— முனைவர் மா. செந்தில் செல்வக்குமரன்
சொ. சந்திரவாணன் 19

12. திருக்கோவிலூர் பகுதியில் அரிய சிற்பங்கள்
— சொ. கோவிந்தராம் 21

13. துறையில் நிகழ்ந்த சிறப்பு நிகழ்வுகள் 23

14. சென்னை அரசு அருங்காட்சியகக் கல்வெட்டுகள்
— ச. கிருஷ்ணமூர்த்தி 29

15. திருப்புலிவனத்தில் கி.பி. 9-10 - ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் கண்டுபிடிப்பு
— முனைவர் ஆ. பத்மாவதி 34

16. கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேட்டின் ஒரு தவறான கருத்துக்கு மறுப்பும் குடும்பர் பற்றிய தொல்லியல் சான்றுகளும்
— முனைவர். குருசாமி சித்தர் 35

# 1 பல்லவர் கால அரசவை மருத்துவர்

கு. குமரவேல்

தொல்லியல்துறை, சென்னை

பல்லவ மன்னர்களில் பெருஞ்சிறப்புடைய மன்னன் மகேந்திரன் (கி.பி. 590-630). இம்மன்னனின் மருத்துவராக இருந்தவரின் கோயில் தொடர்புடையதும் தமிழகத்திலேயே மருத்துவரைப் பற்றிக் குறிப்பிடும் முதல் கல்வெட்டுமான ஒரு அரிய கல்வெட்டு காஞ்சிபுரம் வட்டம் சிறுவாக்கம் என்ற ஊரில் அறியப்பட்டுள்ளது. இவ்வூர் விநாயகர் கோயிலில் $2 \times 2\frac{1}{2}$ அடி அளவில் தரையில் பரவப்பட்டுள்ள கல்லில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. எழுத்துக்கள் ஆணித்தலை வகைத் தமிழ் எழுத்துக்களாகும். இக்கல்வெட்டின் வாசகம்,

''மயேந்திரப் போத்தரைசரு
பெரு மருத்துவனாரு தேவகுலம்''

என்பதாகும். ''மஹே'' என்ற வடசொல் 'மயே' என்று தமிழ்ச் சொல்லாக உள்ளது. தளிரில் பிறந்தவன் என்பதைக் குறிக்கும் 'பல்லவன்' என்ற சொல், தமிழ்ச் சொல்லான போத்து என்ற சொல்லால் போத்தரையன் என்று காட்டப்பட்டுள்ளது. பூலாங் குறிச்சிக் கல்வெட்டும் (கி.பி 400), வல்லம் கல்வெட்டும் (கி.பி. 700) குறிப்பிடுவது போலவே இக்கல்வெட்டும் கோயிலைத் 'தேவகுலம்' என்று குறிப்பிடுகிறது. சங்க இலக்கியங்களில் பாடல்களைப் பாடிய புலவர்களில் இருவர் 'தேவகுலத்தார்' என்னும் பெயருடையவராக இருப்பதும் இங்கு நோக்கத்தக்கது ஆகும். பெருந்தச்சன் பெருங்கொல்லன், பெருங்காவிதி, பெருந்தட்டான், பெரும்பணைக் காரன், பெருந்திணை என அரசனால் பெருமைப்படுத்தப்படும் அலுவலர்கள் 'பெரு' என்ற முன்னொட்டுச் சொல்லுடன் குறிக்கப் படுவது போலவே இங்கு மருத்துவரும் 'பெருமருத்துவனார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இதே ஊரில் 1923–ல் இந்தியஅரசின் கல்வெட்டுப் பிரிவு படியெடுத்து இன்று காணப்படாத ஒரு கல்வெட்டில் ஸ்ரீ கரணப் பெரும்பள்ளி என்றொரு சமணப்பள்ளி குறிக்கப்பட்டுள்ளது. மகேந்திரவர்மன் அப்பரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப் பட்டவன். சமணர்கள் மருத்துவம் செய்வதில் வல்லவர்கள். இங்கு குறிக்கப்படும் மருத்துவர் சைவரா? சமணரா? என்ற வினாவும் எழுகிறது. இது மேலும் ஆய்வுக்குரியதாகும்.

# 2 ரிஷிவந்தியம் வணிகத்தளக் கல்வெட்டு

**மே. சீனிவாசன்**
இளநிலைக் கல்வெட்டாய்வாளர்
சென்னை

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம் ரிஷிவந்தியத்தில் உள்ள அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் திருச்சுற்றில் நடப்பட்டுள்ள 5½ அடி உயரப் பலகைக் கல்லில் வணிகச் செய்தி சொல்லும் ஒரு நல்ல கல்வெட்டு அறியப்பட்டுள்ளது.

பலகைக் கல்லின் முன்புறம் இருகரங்களில் தாமரை மலர்கள் ஏந்தி பூதேவியின் அமர்ந்த நிலை உருவமும் அதன் இருமருங்கிலும் துதிக்கை உயர்த்திப் போற்றும் யானைகளும் கீழ்ப்பகுதியில் இரு குத்து விளக்குகளிடையே பூர்ணகலசம், கலப்பை, சம்மட்டி ஆகியவையும் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

இவற்றின் கீழ் 10 வரிகளிலும் கல்லின் பக்கவாட்டிலும் பின்புறமுமாக 20 வரிகளிலும் கல்வெட்டு உள்ளது. பக்கவாட்டில் உள்ள வரிகளைப் பின்புறக் கல்வெட்டு வரிகளுடன் இணைப்பதிலும் இறுதி வரிகளைப் படிப்பதிலும் சிரமங்கள் உள்ளன. கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு :

**முன் பக்கம்**

1. ஸ்வஸ்திஸ்ரீ பொன்பரப்பின பெரு
2. மாளுக்கு யாண்டு ௰௭ மகர நாயற்று
3 வ-டுவ-௨வக்ஷத்து வஜுஷியும் பெற்ற ரே
4. வதி நாள் இருஷீகுத்து உடையார் தி
5. ருவகத்தீஸ்வமுடைய நாயனார்க்கு
6. நாடு நகரமும் பதினென்விஷ
7. ஷயத்தோமும் பட்டிணப் பகு
8. தி வைத்துக் குடுத்தபடியாவது
9. இவ்வூரில் புகுதுமவை போம
10. வை விற்குஞ் சரக்கு ஆனை

**பின் பக்கம்**

11. க்கு பணம் ௫ குதிரைக்கு
12. பண

13. ம் ச வ
14. ள்கு ெ
15. பாதி
16. க்கு ச
17. புடவை பொதிக்கு பணம் ரு கோள
18. ன் கட்டுக்கு பணம் அ காசு கொள்ளும் ெ
19. பாதிகு
20. உ பாக்கு பொதிக்கு உ சந்தன தூக்கு ரு துகில்தூ[க்கு]
21. க க்கு ம மயிர் தூக்கு க க்கு ம வெண்கல சுமைக்கு உ
22. நூல் பொதிக்கு கூ பருத்திப் பொதிக்கு கஇ ஆமண
23. க்கு கடுகு உப்பு எள்ளு இலுப்பை அல்லிக்கு
24. உ கடுக்காய் நெல்லி சுக்கு மஞ்சள் மால் ெ
25. ண்காயம் அரிசி கருப்புக்கட்டிக்கு பொதி
26. க்கு க முதிரை வற்கங்கங்களுக்குப் பொதிக்கு
27. இ இை . . கள் தலைச்சுை
28. ம மற்றும் எப்பேர்பட்ட சரக்குக்கும்
29. இதன் கம்மாய . . . வும் இப்படி
30. . . .

இக்கல்வெட்டு பொன்பரப்பின பெருமாளுக்கு 17-வது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டதாகும். பொன் மேய்ந்த பெருமாள் என்ற சிறப்புப் பெயர், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டினைக் (கி.பி. 1250-80) குறிப்பதாகும். இவ்வாண்டில் இருஷீத்ரம் என்ற இன்றைய ரிஷிவந்தியத்தில் நாடு, நகரம், பதினெண்விசையம் ஆகிய குழுவினர் கூடி எடுத்த முடிவை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. நாடு என்பது உழவர்களின் குழு அமைப்பாகும். நகரம் என்பது வணிகர்களின் குழு அமைப்பாகும். பதினெண் விசையம் என்பது பல்வேறு இடங்களில் உள்ள உழவு மற்றும் பிற உற்பத்திகள் தொடர்பான வணிகத்தினைக் கூட்டமாக மேற்கொள்ளும் குழு அமைப்பாகும். இவை ஒன்றிணைந்து இவ்வூரில் ஒரு வணிகத் தளத்தினை (பட்டிணப்பகுதி) ஏற்படுத்தி அவ்வணிகத் தளத்திற்கு வந்து விற்பனையாகி வெளிச்செல்லும் சரக்குகளுக்கு தீர்வை விதித்து அவ்வருவாயை இவ்வூர்க் கோயில் வழிபாடு மற்றும் பிற செலவுகளுக்குப் பயன்படச் செய்துள்ளனர்.

கல்வெட்டில் வணிகப் பொருட்களின் பெயர்கள் தரம் வாரியாகக் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான தீர்வைத் தொகைகளும், அவற்றை அளவிடப் பயன்பட்ட அளவுகளும் இடைக்காலத் தமிழக வணிக நடவடிக்கைகளைத் தெளிவாகக் காட்டுவனவாகும்.

வணிகப் பொருள்களாக யானை, குதிரை, உள்கு(?), புடவை (துணி), கோளன் கட்டு, பாக்கு, சந்தனம், துகில், மயிர், வெண்கலம், நூல், பருத்தி, ஆமணக்கு, கடுகு, உப்பு, எள்ளு இலுப்பை, அல்லி, கடுக்காய், நெல்லி, சுக்கு, மஞ்சள், மால் (சாதிக்கால்/துளசி), வெண்காயம், அரிசி, கருப்புக்கட்டி, முதிரை (துவரை முதலியவை) ஆகியவை குறிக்கப்படுகின்றன. இவை எண்ணிக்கை, பொதி, கட்டு, தலைச்சுமை. தூக்கு என்ற அளவுகளால் வகைப்படுத்தப்பட்டு வரி விதிக்கப்பட்டுள்ளன. வரி, 'பணம்' என்ற நாணய அளவில் கூறப்பட்டுள்ளது.

இடைக்காலத்தில் கோயில்கள் சார்ந்த வணிகத் தளங்கள் மிகுதியாக இருந்தன. கோயில் வழிபாடு மற்றும் விழாக்களால் வணிகம் சிறப்புற்றது; வணிகச் சிறப்பால் கோயில் வழிபாடுகளும் விழாக்களும் சிறப்புற்றன இதனை அறிய உதவியாக இக்கல்வெட்டு உள்ளமை சிறப்பாகும்.

## நாகலாபுரம் நடுகல்

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர்-துறையூர் சாலையில் பெருமாள் மலையை அடுத்து சாலை ஓரத்தில் மாடு உருவம் புடைப்புச் சிற்பமாகக் காணப்படும் கற்பலகைக் காணப்படுகிறது. 1 மீட்டர் உயரம் 60 செ மீ. அகலக் கற்பலகையில் காளை ஒன்று புடைப்புச் சிற்பமாக காட்டப்பட்டுள்ளது. காளையின் கழுத்தில் இருக்கும் கயிற்றை இருவர் பிடித்துக் கொண்டிருப்பது போல் அமைக்கப்பட்டுள்ள அச்சிற்பத்தில் வலிமையான உடல்கட்டு உள்ளவர் காளையைப் பிடித்துக்கொள்ள, காளை அவரை நாவினால் தடவிக் கொடுப்பது போல வடிவமைக்கப்பட்டுள்ளது. வீரன் அருகே ஒரு பெண்ணும் சிறுவனும் காட்டப்பட்டுள்ளனர். வீரனின் சிகையலங்காரம், நகைகள் யாவும் நாயக்கர் கால கலைப் பாணியில் அமைந்துள்ளன. சிற்பத்தின் கீழ்ப்பகுதியில் காணப்படும் 6 பேரும் மேலே உள்ள வீரனை வழிபடுகின்றனர். சிற்பத்தின் மேல்பகுதியில் சூரியனும், பிறை வடிவில் சந்திரனும் காணப் படுகின்றன. காளை ஒன்றை அடக்கி வீரமரணம் அடைந்த வீரனுக்காக எடுக்கப்பட்ட நடுகல்லாக இருக்கலாம். இது கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பமாக விளங்குகிறது. இச்சிற்பம் குறித்து தகவல் அளித்தவர் திரு. பிரபாகரன்.

**கி. ஸ்ரீதரன்**
பதிவு அலுவலர்

# 3 மல்லசமுத்திரம் சித்திரமேழிக் கல்வெட்டு

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர், தருமபுரி

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் மல்லசமுத்திரம் என்ற ஊரில் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் இடைக்காலத் தமிழகத்தின் சமுதாயக் கருத்தினைத் தெரிவிக்கும் ஒரு சிறப்பான கல்வெட்டு படியெடுக்கப்பட்டுள்ளது. இவ்வூர் பெருமாள் கோயிலின் வடபுறம் நிறுத்தப்பட்டுள்ள 6' × 5' அளவுள்ள பலகைக் கல்லில் இக்கல்வெட்டுள்ளது.

கல்லின் முன்புறம் வெண்கொற்றக் குடையின் கீழ் தாமரை பீடத்தின் மீது இருகரங்களிலும் விரிந்த தாமரை மலர்களை ஏந்தி சுகாசனத்தில் அமர்ந்த பூமிதேவியின் உருவம் புடைப்புச் சிற்பமாக உள்ளது. இதன் இருபுறமும் குத்து விளக்குகள் உள்ளன. இடதுபுறம் வில், அம்பு, உழவாரப்படை, சுத்தியல், சம்மட்டி, பூர்ணகும்பம், கலப்பை, வெட்டரிவாள் ஆகியவை புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. வலதுபுறம் தண்டம், பாதம், கண்டபேருண்ட உருவம், கழுதை, காகம், நாய், ஊதுகொம்பு ஆகியவை காட்டப்பட்டுள்ளன.

இப்புடைப்புச் சிற்பங்களின் கீழ் வடமொழியில் மூன்று வரிகளில் வாசகம் உள்ளது. தமிழ்ப் பகுதி கல்லின் பின்புறமும் தொடர்ந்து முடிகின்றது. பூமிதேவியின் புத்திரர்களான சித்திரமேழிக் குழுவினரின் சாசனம் என வட மொழிப்பகுதி குறிப்பிடுகிறது.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் 19-ஆவது ஆட்சியாண்டைச் (கி.பி 1197) சேர்ந்த இக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு :

**முன்புறம்**

1. ஸ்ரீஉற் ஹூெவி ஹூதூ . . .
2. ன்ந குமொற்ஹவ மிஸூாதாத்தாய
3. மிதுஜெஷஸ்யூ ஸாமநழ திரிபுவநச் சக்கரவத்
4. திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ ஷெவற்கு யாண்
5. டு பத்தொன்பதாவதில் நிகரிலி சோழமண்டலத்து

**பின்புறம்**

6. க் கங்கனாட்டுத் தகடூர் நாட்டு மருங்கு சூழ்ந்த [கொ]ங்கி
7. ரண்டு நாடு இடங்கை தொண்ணூற்றொன்பது கா
8. சாயப்பட்டிநச் சாலியரோமும் வைய்சிய வாணியந்

9. நகரத்தோமு மூந்றுமண்டல திகழ்ந்த பொற்கோ[லி]
10. ற்க் கைக்கோளரோமும் ஸ்ரீகரண விசைய சேனா
11. பதித் . . டக்கத்து கூலியகம்படி நேர்தடி விச்சாதி ரோமும் ப
12. ள்ளிகள் பந்நாட்டோமும் அக்கசாலைகளோமும் அழியா[நி]
13. லைப் புலிக்குட்டிகளும் இத்தன்மம் காக்க கடவது
14. மேக்கட்டோமும் எம்மிலிசைந்து பூ[ந்*]துறை நாட்டு வே
15. ளாந்[பள்ளி]யான கூலிச்சேவகந்னூரில் சாசன கல்லு நா
16. ட்டித் தந்தோம் இது அழிவு செய்தான் பண்ணி நாய் ப
17. றிச்சு தின்றான் நூற்று[வர் தம்]மம் இவை நாடு
18. பணிக்க நாட்டுக் கணக்கந் எழுத்து

தகடூர் நாட்டினை ஒட்டிச் சூழ்ந்து, அமைந்த வடகொங்கு, தென்கொங்கு ஆகிய இரு கொங்கு நாடுகளைச் சேர்ந்த, 1. இடங்கை 99 காசாயப்பட்டிநச் சாலியர் 2. வைய்சிய வாணிய நகரத்தார் 3. மூன்று மண்டலங்கள் சார்ந்த பொற்கோல் கைக்கோளர் 4. ஸ்ரீகரண விசையசேனாபதியின் கீழ்பட்ட கூலி அகம்படி நேர்தடி விச்சாதிரர் 5. பள்ளிகள் பந்நாட்டார் 6. அக்கசாலையினர் 7. அழியாநிலை புலிக்குட்டிகள் ஆகியோர் தர்மத்தைக் காப்போம் என்று உறுதியளித்துள்ளனர். தர்மம் என்னவென்று குறிப்பிடப்படவில்லை. எனினும் பூந்துறை நாட்டைச் சேர்ந்த வேளான்பள்ளியான கூலிச்சேவகனூரில் ஏதோ ஒரு கோயில் அமைந்து அதற்கு கொடையளித்துள்ளனர் என்பது தெரிகிறது. இத்தர்மத்தை அழிப்பவர்கள் பன்றி, நாய் தின்றவர்கள் என்ற ஒம்படைக்கிளவிக் குறிப்புள்ளது, நாட்டுக் கணக்கன் இந்த ஆவணத்தை எழுதியுள்ளான்.

12-ஆம் நூற்றாண்டில் சாலியர், கைக்கோளர் என இருவகை நெசவாளர் நகரத்தார், அக்க சாலையினர் (காசு அச்சிடுபவர்கள்) ஆகியோர் தங்களுக்குள் படையமைப்பு அமைத்துக் கொண்டும் அதற்கென வீரர்கள், சேனாபதிகள் முதலியோரை பணியமர்த்திக் கொண்டும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர், என்பது இக்கல்வெட்டில் தெளிவாகத் தெரிகிறது.

# 4 திண்டமங்கலம் கல்தொட்டிகள்

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர், தருமபுரி

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் திண்டமங்கலத்தில் பனங்காட்டூர் மாரியம்மன் கோயிலை அடுத்துச் சாலை ஓரத்தில் 2.90 மீ நீளமும் 0.70 மீ அகலமும் உள்ள ஒரு கல்தொட்டியில் கல்வெட்டு அறியப்பட்டுள்ளது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு, தொட்டியின் இருபுறமும் ஒழுங்கற்ற எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

முன் பக்கத்தில்

1. கர வருசம்
2. காத்திகை
3. மீ ௲ உ

என்றும் மறுபக்கத்தில்

1. சேவகக்குட்டி
2. தூதன் [அப்பட்டன்]
3. கல்
4. தொட்டி உபைகம்

என்றும் கல்வெட்டுகள் உள்ளன. இது போன்று மேலும் இரண்டு கல்தொட்டிகள் இவ்வூரிலிருந்து தாரமங்கலம் செல்லும் சாலை ஓரத்தில் உள்ளன. இவற்றில் ஒன்றில் படிக்க இயலாதவாறு பொறிந்து போன கல்வெட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்கத் தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் கட்டிமுதலி என்ற விசயநகரர் கால சிற்றரசர்களால் கட்டப்பட்ட போது அக்கோயிலுக்கு இப்பகுதியிலிருந்து கற்கள் கட்டுமானப் பணிக்காக எடுத்துச் செல்லப்பட்டன என்றும் அவற்றைச் சுமந்து சென்ற வண்டிகளை இழுத்த எருதுகளும், குதிரைகளும் நீர் அருந்துவதற்காக இக்கல்தொட்டிகள் அமைக்கப்பட்டன என்றும் பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர்.

இன்றைய சிற்றுந்துகளும், பேருந்துகளும் வழக்கிற்கு வருமுன் சாலைப் போக்குவரத்து எருதுகளும், குதிரைகளும் இழுத்துச் சென்ற வண்டிகளின் அடிப்படையிலேயே இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் அறுபது எழுபதுகளில் கூடப் பல்வேறு நகரங்களில் சாலையோரங்களில் எருதுகளுக்கும் குதிரைகளுக்குமான நீர்த்தொட்டிகள் இருந்தன. இவற்றை அமைத்துக் கொடுப்பது தர்மமாகக் கருதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் இக்கல்த்தொட்டிகளும் தர்மமாக அமைக்கப்பட்டிருக்கலாம்.

# 5 சித்திரமேழி நந்தவனம்

க. ஈஸ்வரன்
தொல்லியல்துறை, சென்னை

காஞ்சீபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருள்மிகு வெண்காடீஸ்வரர் கோயில் கருவறைத் தரையில் பதிக்கப்பட்டுள்ள $1\frac{1}{2} \times 2\frac{1}{2}$ அடி அளவுள்ள கல்லில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மையில் ஒரு கல்வெட்டு படியெடுக்கபபட்டுள்ளது.

அழகிய வெண்கொற்றக் குடையின் கீழ் இரு அழகிய குத்து விளக்குகளும் அவற்றின் நடுவே ஒரு கலப்பையும் கோட்டுருவங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. கலப்பையின் மேல் வலப்பகுதியில் உடுக்கை அமைப்பில் சம்மட்டியின் உருவம் உள்ளது. இவற்றின் கீழே,

1. ஸ்வஸ்ஸ்ரீ இது
2. சித்திரமேழித் திரு
3. நன்தவநம்

என்று கி.பி. 12-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் மூன்று வரிக் கல்வெட்டுப் பொறிப்பு உள்ளது. சித்திரமேழி என்ற உழவு சார்ந்த வணிகக்குழுவினர் இறைவனுக்கு நாள்தோறும் மலர்கள் வழங்கிடத் தங்கள் குழுவின் பெயரால் நந்தவனம் அமைத்து, நந்தவனம் தங்களது கொடை என்று பலரும் அறிய அறிவிப்புப் பலகைபோல இந்த பலகைக் கல்வெட்டுப் பொறித்து அங்கு பலரின் பார்வையில் படும்படி தரையில் ஊன்றி வைத்துள்ளனர். பிற்காலத்தில் நந்தவனம் அழிந்து இக்கல்வெட்டின் பொருள் தெரியாமல் இக்கல்லினை தரைத்தளமாகப் பதித்துவிட்டனர்.

கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டுகளில் நீர்பாசன வசதிகள் அதிகரித்து உழவு நிலங்களும், உழவு உற்பத்தியும் பெருகின. இதன் காரணமாக வட்டார அளவின் தேவைக்கு மட்டுமே இருந்த நில உற்பத்தி தேவைக்கு மேல் பெருகியதால் உழவர்களே தங்களுக்குள் 'சித்திரமேழி பெரிய நாட்டார்' என்ற குழு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு தென்னிந்தியா முழுவதுமாக வணிகத்தில் ஈடுபட்டனர். இவர்கள் தங்கள் உழவுக் கருவியான கலப்பையினைத் தெய்வமாக வழிபட்டதோடு தங்கள் குழுக்களின் சின்னமாகவும் பயன்படுத்தி அதற்கு சித்திரமேழி (அழகிய கலப்பை) என்ற பெயர் கொடுத்தனர். அவர்கள் பல சமயப் பணிகளைச் செய்தனர். அவற்றில் ஒன்றைக் காட்டுவதே இக்கல்வெட்டாகும்.

# 6 திருப்பாலைப்பந்தல் பாண்டியர் கல்வெட்டு

ஆர். சேட்டு
தொல்லியல் துறை, சென்னை

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், திருப்பாலைப்பந்தலில் உள்ள அருள்மிகு மத்தீஸ்வரநாதர் கோயிலில் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் கல்வெட்டுகளைப் படியெடுத்தபோது கோயிலின் முதல் திருச்சுற்றின் முன்பகுதியில் படியெடுத்த தரைத்தளமாகப் பதிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு சிறப்பானதாகும்.

பாண்டியர்களின் சின்னமான குத்திட்ட இரு மீன்களும் அதன் நடுவில் செண்டும் [சாட்டை] புடைப்புச் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டும், அதன் கீழாக கோடுகள் இடப்பட்டும் உள்ள இக்கல்வெட்டு பத்து வரிகளை உடையது. $1\frac{1}{4}' \times 3\frac{1}{2}$ அளவுள்ள இப்பலகைக் கல்லில் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ள கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:-

1. திருவாசல் திருப்
2. பணி செய்தார் பா
3. ண்டி நாட்டில்
4. வேம்பு நாட்டில் திரு
5. நெல்வேலியில் திரு
6. மேற்றளித் தெருவி
7. ல் கைக்கோள செட்
8. டி குலசேகரப் ப
9. ல்லவரையர் மகனா
10. ர் மருமக்கனாயனா
11. ர்

கைக்கோளர் என்பவர்கள் இடைக்காலத் தமிழகத்தில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டும் துணி வணிகத்தினைச் செய்தும், கோயில்களுக்கும் அரசிற்கும் நல்ல வருவாயை ஈட்டித் தந்தவர்களாவர். பல கோயில்கள் தங்கள் மடவிளாகத்தில் அவர்களுக்குக் குடியிருப்புகளை அமைத்துக் கொடுத்துள்ளன.

திருநெல்வேலியில் மேற்றளி (மேற்குத்தளி) என்று பொதுவாக அழைக்கப் பட்ட திருமால் கோயில் தெருவில் இருந்த கைக்கோளச் செட்டி குலசேகரப் பல்லவரையன் என்பவரது மகனான, மருமக்கள் நாயனார் என்பவர் திருப்பாலைப் பந்தலில் உள்ள கோயிலுக்கு வாசல் அமைத்து அதனில் இக்கல்வெட்டை அரச சின்னத்துடன் பொறித்துள்ளார். காலவெள்ளத்தில் கோயில் சிதைந்து கல்வெட்டின் சிறப்பு அறியப்பெறாமல் இக்கல்வெட்டு இன்று தரைக் கல்லாகிவிட்டது.

# 7 அனந்தமங்கலம் கல்வெட்டுகள்

த. புருஷோத்தமன்
தொல்லியல் துறை, சென்னை

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அனந்தமங்கலம் என்ற ஊரில் மூன்று முழுக் கல்வெட்டுகளும், 6 துண்டுக் கல்வெட்டுகளும் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இவ்வூர் ஏரியின் மதகு அருகில் உள்ள பலகைக் கல்லிலும், சமணர் குன்று வழுக்குப்பாறைச் சிற்பங்களின் கீழும் உள்ள கல்வெட்டுகள் முழுமையானவை. கி. பி. 9 - 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவ்வூர் அகத்தீஸ்வரர் கோயிலில் தரையில் கிடக்கும் கல்வெட்டுகள் துண்டுக் கல்வெட்டுகளாகும். இவை கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இக்கல்வெட்டுகள் இச்சிற்றூரின் தொன்மையை எடுத்துக்காட்டுபவையாகும்.

சமணர் குன்றுச் சிற்பங்களின் கீழ் 'அரட்டநேமி அடிகள்' என்ற பெயர் கி. பி. 9-10-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் இரண்டு கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. மடை அருகில் பலகைக் கல்லில் முன்புறம் ஏழு வரிகளும் பின்புறம் நான்கு வரிகளிலுமாக கம்பவர்மனுடைய(கி.பி. 869-901) கல்வெட்டுக் காணப்படுகிறது. அக்கல்வெட்டின் வாசகம்பின்வருமாறு :

**ஸ்வஸ்திஸ்ரீ கம்பவன்மற்கு**
**யாண்டு இருபத்தொன்றாவது**
**அவநிமங்கலத்து ஏரிகீழ்**
**செங்குட்டி செய்வித்த தூம்பு**

தூம்பு என்பது ஏரிக்கரையின் கீழாக நீண்ட துளை வழியாக நீர் வெளியேறும் வகையில் அமைந்த மடை அமைப்பாகும். அனந்த மங்கலம் என்ற பெயர் இக்கல்வெட்டில் அவநிமங்கலம் என்று குறிப்பிடப் படுவது நோக்கத்தக்கதாகும்.

அகத்தீஸ்வரர் கோயிலில் தரையில் கிடக்கும் ஆறு துண்டுக் கல்வெட்டுகளில் ஒன்று பரகேசரிவர்மனது பெயரைக் குறிப்பிடும் சோழர் கல்வெட்டாகும். இவ்வூர் ஒய்மா நாட்டுத் திருநலூர் நாட்டுப் பிரிவில் ஒரு ஊராக இருந்த செய்தியை அதனில் அறிய முடிகிறது. இறைவனுக்கு அமுதுபடையல், நந்தவனம் ஆகியவற்றுக்கு நிலங்களும்; சந்திவிளக்கு, ஆடு போன்றவை கொடையளிக்கப்பட்டதைப் பிற துண்டுக் கல்வெட்டுகள் சொல்கின்றன.

# 8 ஒடுக்கத்தூர் நடுகற்கள்

த. புருசோத்தமன்
தொல்லியல் துறை, சென்னை

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம் ஒடுக்கத்தூரில் இரண்டு நடுகற்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை, உத்திரகாவேரி நதிக்கரையில் நேமந்தபுரம் சாலையை ஒட்டியுள்ள ஸ்ரீ உமா சாமுண்டீஸ்வரி கோயிலின் வேப்ப மரத்தடியில் நான்கு துண்டுகளாக உடைக்கப்பட்டு கிடக்கும் கற்களில் உள்ளவை யாகும்.

முதல் நடுகல் ஐந்துக்கும் மேற்பட்ட துண்டுகளாக உடைக்கப் பட்டு, மூன்று துண்டுகள் மட்டுமே இன்று கிடைத்துள்ளன. எனினும் கிடைத்துள்ள துண்டுகளிலிருந்து கல்வெட்டுச் செய்தியை ஓரளவு முழுமையாக படிக்க முடிகிறது. வீரனின் உருவப் பகுதியில் தலையின் மேல் பகுதி, ஓங்கிய குறுவாள், வில்லின் நுனி ஆகியவை மட்டுமே இன்று காணும்படியாக உள்ளன. எஞ்சிய கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

1. ஸ்ரீ கோவிசைய நந்தி விக்கிரம பரும
2. ற்கு யாண்டு நாற்பத்திரண்டாவது
3. குப் படுவூர் கோட்டத்துப் பாலி நாட்டொடு
4. வத்தூரிருந்து வாழுங் குருவியர் மகன்
5. மேற் கூற்றுக் க
6. ண்ணக்குறி
7. கள்ளி
8. . . .
9. . . .
10. [நீத்தோர்] பட்டி
11. பெய்தார் புளி
12. கம் பட்டி

பல்லவ மன்னர்களான இரண்டாம் மற்றும் மூன்றாம் நந்திவர்மர்களில் இரண்டாம் நந்திவர்மனே அதிக காலம் (கி.பி. 731-796) ஆட்சி செய்தவன் ஆவான். இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் நாற்பத்திரண்டாவது ஆண்டு இவன் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததே. கி. பி. 773-ஆம் ஆண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு, தமிழ் எழுத்தமைதி ஆய்வுக்கு சிறப்பான ஒன்றாகும். இதனில் மெய் எழுத்துக்கள் புள்ளியிட்டு எழுதப் பெற்றுள்ளன. க, ந, த, ர ஆகிய எழுத்துக்கள் ஆணித்தலை எழுத்துக்களாக உள்ளன. ‘வ’ எழுத்தின் நடுப்பகுதி அதிகம் விரிவு அடையாமல் சேர்ந்து உள்ளது. இவனுக்கு முற்பட்ட மன்னர்களின் நடுகற்கள் வட்டெழுத்தில் அமைந்திருக்க, இந்நடுகல் தமிழ் எழுத்தில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

படுவூர் கோட்டத்து பாலிநாட்டு ஒடுவத்தூரில் (இன்று ஒடுக்கத்தூர்) வாழ்ந்த குருவியர் மகன், மேல் கூற்று கண்ணக்குறி என்ற இடத்தில் ஏதோ ஒரு பூசலில் வீரமரணம் அடைந்துள்ளான். அவனது நினைவு தொடர்பான வழிபாட்டிற்கும், அவனது வழியினருக்குமான நிலம், நீத்தோர் பட்டி என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலம் புளிகம்பட்டியில் இருந்ததாகவும் தெரிகிறது.

இரண்டாவது நடுகல் வலது பக்கம் மட்டும் எஞ்சியுள்ள துண்டாகும். நடுகல்லை ஏதோ ஒரு காரணத்துக்காக இரண்டாக உடைத்து, உருவப் பகுதியைச் செதுக்கிப் பயன்படுத்தியுள்ளனர். இதனில் எஞ்சியுள்ள வாசகம் பின்வருமாறு :

1. . . ஜ கேஸரி வ
2. . . . இருபத்திரண்
3. . . . கோட்டத்து
4. . படு
5. ந
6. ழ
7. தி
8. கம்
9. து
10. . . .
11. றிம
12. வில்
13. ல
14. றைய
15. ன்

இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் இராஜகேசரி, ஆதித்த சோழனாகலாம். இவன் கி.பி. 871 முதல் 911 வரை ஆட்சி செய்தவன் ஆவான். இக்கல்வெட்டு இவனது இருபத்திரண்டாவது ஆட்சி ஆண்டு என்பதால் இதன் காலம் கி.பி. 893 என்று கருதவேண்டும். வில்லறையன் என்ற வீரன் வீரமரணம் அடைந்த செய்தியை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

ஒடுக்கத்தூரின் சமூக அரசியல் வரலாற்றில் பல்லவராட்சியின் முடிவினையும், சோழர் ஆட்சியின் தொடக்கத்தினையும் குறிப்பிடும் சிறப்பு வாய்ந்த இந்நடுகற்கள், துண்டு துண்டாக உடைக்கப்பட்டு கிடப்பது வருத்தத்திற்குரியதாகும். பரவலாகக் கிடந்த இக்கற்கள் தற்பொழுது ஒன்று சேர்த்து அதே இடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## சுந்தரபாண்டியன் திருமண்டபம்

காஞ்சிபுரம் மாவட்டம் திருச்சுச்சூர் கச்சபேஸ்வரர் கோயில் மகாமண்டபத் தூணில் ஒரு கல்வெட்டு அறியப்பட்டுள்ளது. சிற்பங்கள் நிறைந்த தூண்களை உடைய இம்மண்டபத்தில் ஒரு தூணில் அமைந்துள்ள அணிவேலைப்பாடான தாமரை வட்டத்தின் மேலும் கீழுமாக 14-ஆம் நூற்றாண்டு எழுத்தில் இக்கல்வெட்டுள்ளது. அதனில் அம்மண்டபத்தின் பெயரும் மண்டபத்தை யார் அமைத்தது என்ற செய்தியும் உள்ளன. கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு :

1. ஸ்வஸ்திஸ்ரீவிக்ரம
2. சோழ தே .
3. வனா
4. ன இருங்கோள
5. ன் செய்வித்த ஸுந்த
6. ர பாண்டியன் திரு
7. மண்டபம்

இருங்கோளனின் சிறப்புப்பெயர் சோழர் பெயரில் விக்கிரமசோழதேவன் என்று இருக்க, இவன் பாண்டிய மன்னன் பெயரில் மண்டபம் அமைத்துள்ளான். சோழரின் கீழிருந்த சிற்றரசர்கள் பாண்டியரின் கீழ் சிற்றரசர்களாக மாறிய அரசியல் போக்கினைக் இக்கல்வெட்டு எடுத்துக்காட்டுகிறது.

தகவல் திரு. பொ. கோ. லோகநாதான்
தொல்லியல் துறை, சென்னை

# 9 பிச்சிவாக்கம் கல்வெட்டுச் செய்திகள்

பொ. கோ. லோகநாதன்
தொல்லியல் துறை, சென்னை

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், பிச்சிவாக்கம் பட்டமுடீஸ்வரர் கோயிலிலிருந்து ஏழு துண்டுக் கல்வெட்டுகளும் ஒரு முழுக் கல்வெட்டும் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை கருவறை, திருச்சுற்றின் மேற்கு, தெற்குப் பகுதிகள், அம்மன் கோயில் திருச்சுற்றுச் சுவர், கருவறைச் சுவர் ஆகிய இடங்களில் உள்ளன. இவற்றில் பிற்காலக் கல்வெட்டு ஒன்றைத் தவிர பிற அனைத்தும் வேறு இடத்திலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு தரையில் பதிக்கப்பட்ட துண்டுக் கல்வெட்டுகளாகும்.

சோழர் காலத்தில் இப்பகுதியில் விளங்கிய பார்த்திவேந்திரவர்மன் காலத்திய (கி.பி. 956-969) மூன்று கல்வெட்டுகளின் ஐந்து துண்டுக் கல்வெட்டுகள் இவற்றில் உள்ளன. இவன் இராசராசசோழனின் சகோதரன் என்றும், இப்பகுதியை ஆண்ட சிற்றரசன் என்றும் இரு கருத்துக்கள் உண்டு. இவனது 10-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்தவை இரண்டும் 13வது ஆட்சியாண்டைச் சேர்ந்த ஒன்றும் ஆக மூன்று கல்வெட்டுகள் இவற்றில் உள்ளன. இக்கல்வெட்டுகளில் பிச்சிப்பாக்கம், காஞ்சிபுரத்துக் காமகோட்டப்புறம் என்று சொல்லப்படுகிறது. எனவே இவ்வூர் காஞ்சி காமாட்சியம்மன் கோயில் சார்ந்த நிலங்கள் இருந்த ஊராக இருக்க வேண்டும். இக்கல்வெட்டுகள் தாமர் கோட்டத்து அசம்புழலை விளத்தூர் கிழவன், என்பவன் அம்பலம் (மண்டபம்) எடுத்த செம்தியையும் அந்த அம்பலப் பராமரிப்புக்காக நிலங்கள் விலைக்கு வாங்கிக் கொடுத்த செய்தியையும் சொல்கின்றன. அம்பலம் தொடர்பானவை என்பதால் இக்கல்வெட்டுகளில் கொடை பெற்ற கோயில் பெயரோ, இறைவன் பெயரோ காணப்படவில்லை.

மேலுமுள்ள இரு துண்டுக் கல்வெட்டுகள் மன்னன் பெயர் அறிய முடியாத சோழர் காலத் துண்டுக் கல்வெட்டுகளாகும். இவற்றில் ஒன்றில் சிவன் கோயிலில் விளக்கெரிப்பதற்காக பசுக்களும், ஆடுகளும் கொடுக்கப்பட்டு அவை இடையர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட செய்தியுள்ளது. இடையர்களின் பெயர்கள் சோழக்கோன் படுக்கன், ஆடுங்கூத்தன் படுக்கன், கோமாளிக்கோன் பொன்னம்பி, நாராயணக் கோன் என்று குறிக்கப்பட்டுள்ளன.

முழுமையாக உள்ள கல்வெட்டில் கலிவருடம் 5015, சகவருடம் 1836, பிரபவாதி வருடம் ஆனந்த ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.

இவை கி. பி. *1914*-க்கு இணையானவை. திருவேங்கிட முதலியார் என்பவர் தன் பொருட் செலவில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த தேவகோட்டை வைரவன் ஆச்சாரி என்ற ஸ்தபதியைக் கொண்டு சிதைந்திருந்த கோயிலைப் புதுப்பித்து மகாமண்டபம், நீராழிப்பத்தி ஆகியவை கட்டியுள்ளார். இவருக்கு காஞ்சிபுரம் தாசில்தார் நரசிம்ம அய்யரும், செங்கல்பட்டு கலெக்டர் ரைஸ் துரையும் உதவியாக இருந்தனர்.

**I அ. கருவறை தரைப் பகுதி**

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோப்பாத்திவே
3. ந்திரபன்மர்கு
4. யாண்டு பத்தா
5. வது காமக்கோ
6. ட்டப் புறத்துப்
7. பிச்சிபாக்கத்து
8. க் கண்ணம் பா
9. க்கிழான் உடுஜி
10. ஸஉஷனும் இவ
11. ன்றம்பி நரயூ
12. ஸஉஷனும் யாங்
13. களிவ்வூருடை
14. ய ஹஜி தாமர்
15. க் கோட்டத்து அ
16. சம்புழலை விள
17. த்தூர் கிழவன்
18. பட்டன் மதியா
19. ....

**ஆ. திருச்சுற்று தென்தரைப் பகுதி**

1. றை .. ம் பாக்க
2. மக்கள் பக்கல் விலைகொ
3. ண்டு அம்பலப்பட்டி
4. யாக வைச்ச நத்தந் த
5. டி மூன்றினால் வந்த நி
6. [லம் இரண்]டே முக்காலே ..
7. ண நிலத் ....

**II திருச்சுற்று மேற்குத் தரைப் பகுதி**

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோப்பார்தி

3. வேஹாதி ப
4. தி[கு] யாண்டு ப
5. [தி]ன் மூன்றாவது
6. ம் மண்ட . . .

## III பரமானந்தவள்ளி தாயார் சந்நதி திருச்சுற்று மேற்குத் தரைப் பகுதி

1. ஸ்வஸ்ரீ கோ
2. பாத்திவேந்திர ப
3. ன்மர்க்கு யாண்டு பத்த[ா]
4. வது காமகோட்டப் புற
5. த்து பிச்சிபாக்க[த்]து
6. தாமர் கோட்டத்
7. து அசம்புழலை வி
8. ளத்தூர் கிழவன் பட்ட[ன்]
9. மதியாமிறை எம்மு
10. ர் எடுப்பித்த அம்பலத்
11. து கிழவன் விளத்தூர்
12. . . .

## IV பரமானந்த வள்ளி தாயார் சன்னதி திருச்சுற்று மேற்குத் தரைப் பகுதி

1. மந்த
2. லவாரி . . . மேலு
3. நிலம் இரண்[டே*]
4. முக்காலே [நாலு]
5. மாகாணி நிலமு
6. பெறு விலைக் கா[ண]
7. மேற் கொண்டு . . .
8. ண்டு[கி]ணறும்
9. அம்பலப்பட்டிக்
10. கு விளத்தூர்[கிழவ]
11. ன் பட்டன் மதியா [மிறை]
12. க்கு விற்று விலை
13. ஸாவணை[செய்து]
14. குடுத்தோம்[கண்]
15. ணம்பபாக் கிழான் ...
16. வஸிஷ்ட
17. ஷ..
18. ..விரு..

# 10 பொன்னை வாய்க்கால் ஒப்பந்தக் கல்வெட்டு

ப. பூபாலன்

தொல்லியல் துறை, சென்னை

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பொன்னை என்ற ஊரில் ஆற்றங்கரையில் உள்ள ஸ்ரீராமுலு நாயுடு நிலத்தில் இருக்கும் பாறையில் ஓர் கல்வெட்டு படியெடுக்கப்பட்டுள்ளது. கி.பி. 1435யைச் சேர்ந்த இக்கல்வெட்டு கீழ்க்கரைச் சாது அகரத்தாருக்கும் பொன்னை ஊராருக்கும் இடையிலான ஒரு நீர்ப்பாசன ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிடுவதாகும். விஜயநகரர் காலத் தொடக்கத்தில் கிராம அளவிலேயே நீர்ப்பாசனம் தொடர்பாக உடன்படிக்கைகள் ஏற்படுத்திக் கொண்டமைக்கு இக்கல்வெட்டு நல்லதொரு சான்றாகும். கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

1. ஸ ஹஸ்ர ஸ்ரீஸகாப்த சூநாடும[எ]
2. ன்மேல் செல்லா நின்ற ராக்ஷ[ஸ]
3. வஷ ஆனி மீ ரு உ கரஷ்ணபக்ஷ
4. து வத யுழ சனி வாரமும் பெ
5. ற்ற திருவாதிரை னாள் வள்ளிமலைப் பற்று
6. கீழ்கரைச் சாது அகர மகாஜநங்க
7. ளும் பொன்னை ஊரவரும் யெங்களில்
8. பொருந்தி[அ]க ஆற்றிலே வேப்பம்பூட்டை
9. முகப்பாக ஆற்றுக்காலுக்கு கல்லு வெட்டி
10. னபடி இந்த காலில் அருநீர் பொன்னை தம
11. னிக்கும் பெருகக் கீழ்க்கரைச் சாது ஏரிக்கும் இந்த
12. முகப்பில் ஆற்றில் அனைந்து நீர் கட்டி
13. க்கொள்ள கடவராகவும் யிப்படிக்கு இ
14. ரண்டு திறத்தரும் பொருந்தி கல்லுவெட்டி
15. னோம் இந்த தருமத்துக்கு அஹிதம் பண்ணின
16. வன் கங்கைக்கரையிலே கபிலை பசுவை
17. கொன்ற பாவத்திலே போகக் கடவன் உ.

மழை குறைந்து நீர் குறைவாக உள்ள காலங்களில் (அறுநீர்) கீழ்க்கரைச் சாது அகரத்துப் பிராமணர்கள், தங்கள் நிலங்களுக்கு கீழ்க்கரைச் சாது ஏரி வழியாக நீர் பெற பொன்னை ஊராரிடம் செய்து கொண்ட உடன்படிக்கை இது. அறுநீர் காலத்தில் ஆற்றிலிருந்து வாய்க்கால் பிரியும் முகப்பான வேப்பம் பூட்டை என்ற மதகருகில், உள் ஆற்றில், நீரைப் பொன்னை தமனி (வன்னிமரம்) வரை நிற்கும் வண்ணம் அனைத்து கீழ்க் கரைச் சாது ஏரிக்கு எடுத்துக்கொள்ள இவ்வுடன்படிக்கை வழி செய்கிறது. இப்படிச் செய்ய இரு திறத்தாரும் இசைந்து (பொருந்தி) இந்த முடிவைக் கல்வெட்டாக வெட்டிக் கொண்டுள்ளனர். அரசின் தலையீடு இன்றி கிராம அளவிலேயே இவ்விதம் இசைவு செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பிராமணர் ஊருக்கு வசதி செய்ததால் இந்த இசைவு தர்மம் என்று இறுதியில் குறிக்கப் பட்டுள்ளது எனக் கருதலாம்.

## முன்சீப் வேதநாயகம் பிள்ளையும் மன்னர் திருமலை அரண்மனை ஓவியமும்

''ஓவியர் நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியை யான் வேண்டிட ஆண்சித்திரமேல் நான்பாரேன்
பாவையர்கள் உருவெனில் நீர் பார்க்க மனம் பொறேனென்றாள்
காவிவிழி மங்கையிவள் கற்பு வெற்பின் வற்புளதால்''

முன்சீப் பணி காரணமாக, அரண்மனையில் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த நீதிமன்றத்திற்கு இவர் வந்த போது ஓவியங்கள் அழகுற இருந்து இவரைக் கவர்ந்துள்ளன. தனது 'பெண்மதி மாலை' என்ற நூலில் ஒரு தம்பதியர் அரண்மனைக்குச் செல்வது குறித்த ஊடலாக இப்பாடலைச் சேர்த்துள்ளார். பின்னர் சுதையும், சுண்ணாம்பும் பூசப்பட்டு இவ்வோவியங்கள் மறைந்துவிட்டன போலும். மூன்றாண்டுகளுக்கு முன் சில தூண்களில் உள்ள ஓவியங்கள் இத்துறை பாதுகாப்புப் பணி காரணமாக வெளிப்பட்டு இன்று பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தகவல்: சீ. இராமச்சந்திரன்
கல்வெட்டாய்வாளர் (ஓய்வு)

11

# வல்லவன் கோட்டை சமணப்பள்ளிக் கல்வெட்டுகள்

**முனைவர் மா. செந்தில்செல்வக்குமரன்**
தொல்லியல் துறை, திருநெல்வேலி

**செ. சந்திரவாணன்**
தொல்லியல் துறை, குற்றாலம்

கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 1000க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. சென்ற திங்களில் திருநெல்வேலி மாவட்டம், வல்லவன் கோட்டையில் படியெடுக்கப்பட்டுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் என்பது குறிப்பிடத்தக்க தாகும். அவற்றின் செய்திகள் இங்கு தரப்படுகின்றன.

கல்வெட்டுள்ள கல், இன்று இவ்வூர் அய்யனார் கோயில் முன்பாக நடப்பட்டுத் தெய்வமாக எண்ணெய் பூசி வழிபடப்பட்டு வருகிறது. எண்ணெய்ப் பிசுக்கு அகற்றப்பட்டு கல்வெட்டு படியெடுத்துப் படிக்கப்பட்டுள்ளது. சடையன்மாறன், மாறன் சடையன் என அடுத்தடுத்து ஆட்சி செய்த தந்தை, மகன் ஆகிய இரு மன்னர்களின் காலத்தில் இருந்த ஒரே நபர் தொடர்புடையவை யாக இக்கல்வெட்டுகள் உள்ளன.

இரண்டு கல்வெட்டுகள் ஒன்றடுத்து ஒன்றாகத் தொடர்ந்து வெட்டப்பட்டுள்ளன. இரண்டிற்கும் பொதுவாக ஸ்ரீ-என்ற மங்கல எழுத்து உள்ளது. கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

1. ஸ்ரீ கோமாறஞ்சடையற்கு யாண்டு இருபத்தைஞ்சு இவ் வாண்டு [க]ளக்கு
2. டி நாட்டுக் கீழ்மங்கலத்துப் புகழங்குடியான்
3. என் மணவாட்டி வெண்புநாட்டு நால்கூர் களியன் மொழி
4. யைச் சாத்தி நிதிவரமங்கலத்து அருட்டுணைப் பெரும்
5. பள்ளிக்கு அடுத்த ஆடு ஐன்பது ||உ கோச்சடைய மாற
6. ற்கு யாண்டு உ இதனெதிர் டு இவ்வாண்டு களக்குடி நாட்டு கீழ் மங்கலத்து

7. ப் பல்பள்ளிசன்தந் நிதிவரமன்கலத்து அருட்டுணைப் பெரு[ம்]* பள்ளிக்கு
8. புகழ்குடியான் றன்னைச் சாத்தி அடுத்த ஆடு நாற்பத்தைஞ்சு

---

நிதிவரமங்கலத்தில் அருட்துணைப்பெரும்பள்ளி என்றொரு சமணப்பள்ளி இருந்துள்ளது. அப்பள்ளிக்கு களக்குடி நாட்டுக் கீழ் மங்கலத்தைச் சேர்ந்த புகழங்குடியான் என்பன் தனது மனைவியின் நினைவாக 50 ஆடுகள் கொடுத்துள்ளான்.

இவனது மனைவி வெண்புநாட்டு நால்கூரைச் சேர்ந்த களியன்மொழி என்பவளாவாள். இவன் கொடுத்த இக்கொடை சடையன்மாறனின் 25-ஆம் ஆட்சியாண்டில் கொடுத்த கொடை யாகும். சடையன்மாறன் என்பது சடையனின் மகன் மாறன் என்று பொருள்படும். இவனை ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (815-862) எனக்கொண்டால் இக்கல்வெட்டு கி.பி. 840ஐச் சேர்ந்ததாகும். தொடர்ந்துவரும் இரண்டாம் கல்வெட்டு ஆண்டுக் குறிப்புகள் எண்ணால் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை 2 அதன் எதிர் 5 என்று கொண்டால் மாறனின் மகனான சடையன் இரண்டாம் வரகுணனின் (கி.பி. 862-887) 7-வது ஆண்டு, கி.பி. 869 எனக் கொள்ளலாம்.

இது சரியெனில் முதல் கல்வெட்டை அடுத்து 29 ஆண்டுகள் கழித்து புகழங்குடியான் தனது நினைவாக 45 ஆடுகள் கொடுத்துள்ளான் என்பது தெளிவாகிறது. பொதுவாக இக்கல்வெட்டுகள் தனித்தனியாகப் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு ஒன்றாகப் பொறிக்கப்பட்டிருப்பதால் இரண்டாவது கொடை யளிக்கப்பட்டதின் பிறகு முதல் கொடையும்கோயில் பதிவேடுகளைப் பார்த்துப் படியெடுத்து கல்லில் வெட்டப்பட்டுள்ளது என்று கருத இடமேற்படுகிறது. கல்வெட்டில் 'ஐ', 'எ' முதலிய எழுத்துக்கள் மற்றும் 2, 5 ஆகிய எண்கள் வட்டெழுத்து எழுத்தமைதிக்குக் குறிப்பிடத்தக்கவையாகும்.

(நிதிவரமங்கலம் என்பதை நீதியார்மங்கலம் என திரு. சீ. இராமசந்திரன் கல்வெட்டாய்வாளர் (ஓய்வு) படித்துள்ளார்.)

## 12 திருக்கோவிலூர் பகுதியில் அரிய சிற்பங்கள்

செ. கோவிந்தராம்
காப்பாட்சியர், திருக்கோவிலூர்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டக் கள ஆய்வின் போது கலை நுணுக்கம் காட்டிச் சமுதாயச் செய்திகள் சொல்லும் சிற்பங்கள் சில கோயிலிலும் ஊர்ப்பகுதியிலும் கண்டறியப்பட்டுள்ளன. திருவெண்ணைநல்லூர், ஆவியூர், நெற்குணம் ஆகிய ஊர்களில் அறியப்பட்ட சிற்பங்கள் நிழற் படமெடுத்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவைபற்றி இங்கு சுருக்கமாகக் காண்போம்.

திருக்கோவிலூரிலிருந்து பண்ருட்டி செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் ஆவியூர். ஊர் வாயிலின் அருகில் விநாயகர் மற்றும் கோழிச் சிற்பங்கள் பலகைக் கல்லில் செதுக்கப்பட்டு ஒரு மேடையில் நடப்பட்டுள்ளன. விநாயகர் உருவம் 60×90 செ.மீ. அளவுடையது. நான்கு கரங்களில் பின் வலதுகரத்தில் விரிந்து மலர்ந்த மலரும், இடக்கரத்தில் அங்குசமும் முன் வலது கரத்தில் தந்தமும்(?) இடதுகரத்தில் மழுவும்(?) உள்ளன. கரண்ட மகுடமும் மடித்த கால்களும் உருவத்தின் மேல் கீழ் பகிர்மானங்களில் உள்ள வேறுபாடுகளும் சிற்பம் நன்கு உயரமான புடைப்புச் சிற்பமாகக் காட்டப்படாமல் உள்ளமையும் இதனைக் கிராமியக் கலையாகக் காட்டுகின்றன. இதன் காலம் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டாகும்.

இதன் அருகில் உள்ள மற்றொரு கற்பலகையில் சேவலும் மனித உருவமும் உள்ளன. சேவல் பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளது. மனித உருவம் வலது கையில் விரிந்த சாமரம் கொண்டும் இடது கையினை மார்பளவில் வைத்தும் காட்டப்பட்டுள்ளது. இதனில் எழுத்துக்கள் ஏதுமில்லை. பலகைக் கல்லில் இடப்பகுதி உடைந்தும் கீழ்ப்பகுதி புதைந்தும் உள்ளது. சேவலுக்கு மரியாதை தருவது போன்ற இவ்வமைப்பு ஏற்கனவே கி.பி. 5-6 ஆம் நூற்றாண்டு கால அளவில் கிடைத்துள்ள விழுப்புரம் மாவட்டம் அரசலாபுரம், இந்தளூர் கோழிக்கற்களை நினைவூட்டுகிறது. இக்கோழிக்கல்லின் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டாகலாம்.

திருவெண்ணைநல்லூர் அருள்துறை நாயனார் கோயிலில் உள்ள வழக்குரைத்த மண்டபத் தூணில் ஒரு அரிய பெண் சிற்பம் காணப்படுகிறது. ஒரு இடை, இரு கால்கள், மூன்று உடல்கள் உடையதாக இப்பெண் சிற்பம் உள்ளது. நடனமாடும் கோலத்தில் இப்பெண் மிக விரைந்து கைகளை விரித்தும் இடது புறமும் வலது புறமும் சரிந்து வளைந்தும் கைகளை இணைத்து ஓசை எழுப்பியும் ஆடும் வேகச் சுழற்சியை இச்சிற்பம் காட்டுவதாகக் கருதலாம். இச்சிற்பத்தின் காலம் கி. பி. 14-15 நூற்றாண்டைய விசயநகரர் ஆட்சிக் காலமாகலாம்.

திருக்கோவிலூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள நெற்குணம் என்னும் சிற்றூரில் சாலை ஓரத்தில் ஒரு இல்லத்தின் முன்பாக தலைப்பலிச் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. இதனில் கல்வெட்டுகள் ஏதுமில்லை. வீரன் இடக்கையால் தனது தலைமுடியைப் பிடித்துக் கொண்டு வலது கரத்தால் தன் கழுத்தருகில் ஒரு குறு வாளால் சிரத்தை அரியும் காட்சி காட்டப்பட்டுள்ளது. வீரன் தன் விருப்பமாகச் சிரப்பலி தருவதால் அவன் உடலில் விரைப்புத் தன்மை ஏதும் காட்டப்படாது திரிபங்க நிலையில் மிக எழிலுடன் காட்டப்பட்டுள்ளான். சிற்ப அமைதி கி.பி. 14-15 நூற்றாண்டாகலாம்.

## மூன்று கூற்று நல்லூர்

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டத்தில் திண்டுக்கல் மதுரை நோக்கிச் செல்லும் குளித்தலை மணப்பாறைச் சாலையில் கோட்டைப்பட்டி என்றொரு ஊர் உள்ளது. இவ்வூர் நத்தமேட்டில் ஒரு சிறு கல்வெட்டும் பல புடைப்புச் சிற்பங்களும் உள்ள பலகைக்கல் நடப்பட்டுள்ளது. கல்லின் மேல்பகுதியில்,

1. ஸ்வஸ்ஸ்ரீ முந்று கூற்று நல்
2. லூர்''

என்ற சிறு கல்வெட்டுள்ளது. அதன் கீழாக ஊன்றப்பட்ட வாள், குத்துவிளக்கு, கலப்பை கொழு, மயில், உருண்டை வடிவக்கொடி (தொம்பை), கண்ணாடி, நாய், காகம், ஊதுகொம்பு, சுருள்வாள், கழுதை, பாம்பு, நீள்பிடியுள்ள முள்-வைக்கோல் தள்ளும் கோல், முனிவர்கள் தவமிருக்கும் போது கைத்தாங்கும் கோல்(?) முதலியவை தெளிவாக ஆனால் ஒழுங்கற்ற வரிசையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன.

இது போன்ற புடைப்புச் சிற்பக் கற்கள் பல வணிகர் கல்வெட்டுகளிலும், சித்திரமேழி, இடங்கை சமூகத்தினர், கம்மாளர் சமூகத்தினர் தொடர்புடைய கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

கல் நடப்பட்டுள்ள ஊரின் பெயரைத் தெரிவிப்பதாக இக்கல் இருந்திருக்க வேண்டும். நல்லூர் என்ற பின்னொட்டுச் சொல் கோயில் சார்ந்த ஊர்களைக் குறிப்பதாகும்.

தகவல் நாக. கணேசன்
காப்பாட்சியர், கரூர்

# 13 துறையில் நிகழ்ந்த சிறப்பு நிகழ்வுகள்

## பள்ளிக் கல்வி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள் வருகை

தொல்லியல் துறையின் அலுவலகத்திற்கு 8-7-2006 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தார். சிறப்பு ஆணையர் திருமிகு தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்று முதலில் துறையில் அமைந்துள்ள வரலாற்றுக் காட்சியகத்தை அமைச்சர் பார்வையிட்டார். காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள தொல்பொருட்கள், பானை ஓடுகள், எசாலம் செப்பேடு போன்றவை கூறும் வரலாற்றுச் செய்திகளை அமைச்சர் ஆர்வத்துடன் கேட்டறிந்தார். வரலாற்றுக் காட்சியகத்தின் பொருட்கள் பற்றிய குறிப்புகளை சிறப்பு ஆணையர் அவர்கள் முன்னிலையில் திரு. து.துளசிராமன், திரு.ச.செல்வராஜ், திருமதி. சீ.வசந்தி, திரு.ஸ்ரீ.ஸ்ரீகுமார் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

கருத்தரங்க அறையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் துவங்கியது. தொல்லியல் துறையின் மதுரை உதவி இயக்குநர்(பொ), திரு.சொ. சாந்தலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சிறப்பு ஆணையர் அவர்கள் சிறப்பு செய்தார்.

தொடர்ந்து துறையின் பணிகள் பற்றிய படக் காட்சியும் அதற்கு உரிய விளக்கமும் அளிக்கப்பட்டது. தொல்லியல் துறை மேற்கொண்டு வரும் கல்வெட்டு, அகழாய்வு, வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்பு, வரலாற்று அகழ்வைப்பகங்கள், தொல்லியல் அலுவலர்கள் பணி, கல்வெட்டு பயிற்சி நிறுவனம், இரசாயனப் பிரிவு, பதிவுப் பணி பற்றிய குறிப்புகளை பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன் எடுத்துரைத்தார். கீழ்த்திசைச் சுவடி நூலகம் குறித்த குறிப்புகள் காப்பாட்சியர் திரு. சௌந்திரபாண்டியனால் அளிக்கப்பட்டது. தொல்லியல் துறையில் நிர்வாகப் பிரிவுஅமைப்பு மற்றும் காலியாக உள்ள பதவிகள் குறித்த விளக்கங்களை உதவி இயக்குநர் திருமதி. சு. சீதாலட்சுமி அளித்தார்.

தொடர்ந்து சிறப்பு ஆணையர் திருமிகு தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப., அவர்கள் பகுதி II திட்டங்கள் குறித்தும், புதியதாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கும் பூம்புகார் கடல் ஆய்வு, கல்வெட்டு பயிற்சி நிறுவனம் மேம்படுத்துதல், கல்வெட்டுகள் பதிப்பித்தல், அகழாய்வு அறிக்கைகள் வெளியிடுதல், கல்வெட்டு பயிற்சி நிறுவனத்தில் பயின்ற மாணவர்கள் எழுதிய ஆய்வேடுகள் அச்சிடுதல், தமிழ் நாட்டில் உள்ள மரபு சின்னங்களை ஆவணப்படுத்துதல் போன்ற திட்டங்களின் சிறப்புகளை எடுத்துரைத்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டங்களைப் பற்றிய விளக்கங்களை அவ்வப்பொழுது கேட்டறிந்தார்கள்.

தொடர்ந்து கல்வெட்டுச் சிறப்பிதழ்-70 வெளியிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. நாகப்பட்டினம் மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கிடைத்த சிந்து சமவெளி எழுத்து பொறித்த புதிய கற்கால கைக் கோடரியின் சிறப்புகள் குறித்த கட்டுரைகள் இவ்விதழில் தொகுக்கப்பட்டு சிறப்பிதழாக வெளிடப்பட்டது. இவ்விதழைப் பற்றிய சிறப்புகள், கட்டுரைகள் பற்றிய அறிமுக உரையை உதவி கல்வெட்டுக்கண்காணிப்பாளர் திருமதி நா. மார்க்சியகாந்தி நிகழ்த்தினார். பின்னர் கல்வெட்டு இதழ்-70 மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. முதல் பிரதிகளை சிந்துவெளி எழுத்தாய்வாளர் திரு. இரா.மதிவாணன் மற்றும் செம்பியன்கண்டியூர் ஆசிரியர் திரு. வி. சண்முகநாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்கள்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்புரை யாற்றினார்கள். தொல்லியல், கல்வெட்டு, வரலாறு ஆகியவற்றில் தமக்கு மிகவும் ஈடுபாடு உண்டு எனவும், சிறுவயதில் வரலாற்றுச் சிறப்புமிக்க உடையார்குடி, மேலக்கடம்பூர், வீராணம் ஏரி போன்ற இடங்களை நேரில் சென்று பார்த்து மகிழ்ந்ததாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மனோரா போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க வரலாற்றுச் சின்னங்களை மிகுந்த ஈடுபாட்டுடன் நேரில் சென்று கண்டு மகிழ்ந்ததாகவும் குறிப்பிட்டார்கள். தொல்லியல் துறையின் சீரிய பணிகளை பாராட்டியதோடு, துறையின் பணிகளுக்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதாகத் தெரிவித்தார்கள்.

கல்வெட்டு சிறப்பிதழில் கட்டுரை அளித்தவர்களுக்கும், அச்சுப்பிரிவினர்க்கும், இதழ் சிறப்பாக வெளிவர பணியாற்றியவர் களுக்கும் செம்பியன்கண்டியூரில் கள ஆய்வு மேற்கொண்டவர் களுக்கும் பாராட்டுத் தெரிவித்து தொல்லியல் துறை சிறப்பு

ஆணையர் அவர்கள் அளித்த சான்றிதழ், கல்வெட்டு இதழுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் உரியவர்களுக்கு வழங்கப் பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் தரங்கம்பாடி காப்பாட்சியர் திரு. கோ.முத்துசாமி நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சிக்கு வேண்டிய ஏற்பாடுகள் இளநிலைப் பொறியாளர் திரு. ரா. நாராயணன், உதவிப் பொறியாளர் திரு. த. தங்கவேல் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரால் சிறப்பாக செய்யப்பட்டது. நிகழ்ச்சியின் இணைப் புரையை வரலாற்றுக்கு முந்தைய கால அகழாய்வாளர் திரு. வெ. இராமமூர்த்தி வழங்கினார். ஆய்வுக் கூட்டம் நாட்டுப்பண் உடன் இனிதே நிறைவுற்றது.

செய்தித் தொகுப்பு: கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர், சென்னை

## தர்மபுரி மாவட்டத் தொல்லியல் கையேடு வெளியீடு

தொல்லியல் துறையின் சிறப்புத் திங்கட்பொழிவு மற்றும் தர்மபுரி மாவட்டத் தொல்லியல் கையேடு வெளியீட்டு விழா 23.7.2006 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4·00 மணியளவில் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கருத்தரங்கக் கூடத்தில் சிறப்புடன் நடைபெற்றது. இவ்விழாவில் தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. தலைமையில் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் திரு. மா சந்திரசேகரன், இ ஆ.ப. "தர்மபுரி மாவட்டத் தொல்லியல் கையேடு" நூலினை வெளியிட்டார்.

தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் தர்மபுரி மாவட்டம் மோதூர் என்ற இடத்தில் நடைபெற்ற அகழாய்வு மற்றும் அதனில் கிடைத்த தொல்பொருட்களின் கண்காட்சி நடத்தப்பட்டதை விரிவாக எடுத்துக் கூறினார். ஒருங்கிணைந்த முந்தைய தர்மபுரி மாவட்டத்தின் கல்வெட்டுகள் தொகுதி-II விரைவில் வெளியிடப்படும் எனவும் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தர்மபுரி தொல்லியல் அலுவலர், திரு. ச. செல்வராஜ் வரவேற்க இந்நூலின் அறிமுகவுரையை சென்னை தொல்லியல் அலுவலர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி நிகழ்த்தினார். இந்நூலின் முதல்படியை திரு. ம. மாணிக்கம், தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை செயலாளர் பெற்றுக் கொண்டார். திருமதி ரா. தில்லைக்கரசி, முதுகலை வரலாற்றாசிரியர், வாழ்த்துரை வழங்கினார். தர்மபுரி அகழ்வைப்பக காப்பாட்சியர் திரு. இரா. சிவானந்தம் நன்றிகூற விழா இனிது நிறைவுற்றது.

அவ்வமயம் தொல்லியல் துறை முன்னாள் உதவி இயக்குநர் முனைவர் ர. பூங்குன்றன் 'வரலாற்றில் கங்கர்' என்ற தலைப்பில் சிறப்புத் திங்கட்பொழிவாற்றினர்.

தர்மபுரி மாவட்டத்தின் தொன்மைச் சிறப்பு, அவற்றைப் பாதுகாத்தல் பொதுமக்கள், மாணவர்கள் அறியச் செய்தல் ஆகிய வற்றின் முக்கியத்துவம் பற்றி அனைவரும் விரிவாக எடுத்துக் கூறினர்.

## தமிழகத் தொல்லியல் கழகத்தின் ஆவணம் இதழ்-17 வெளியீடு

தருமபுரி பரம்வீர் பானாசிங் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 23-7-2006 அன்று முற்பகல் தமிழகத் தொல்லியல் கழகத்தின் ஆய்விதழான ஆவணம்-17னை தொல்லியில்துறை சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

ஆவணம் 17-வது ஆய்விதழில் முதல் பிரதியை பள்ளித் தாளாளர் சி. பார்த்திபன் பெற்றுக்கொண்டார். பெண்ணையாறு தொல்லியல் சங்க நிர்வாகி கே.எம். தட்சணாமூர்த்தி வரவேற்றார். தமிழக தொல்லியல் கழக துணைத் தலைவர் முனைவர் ப. சண்முகம் தலைமை வகிக்க சென்னைப் பல்கலைக் கழக தமிழிலக்கியத் துறை தலைவர் முனைவர் வீ.அரசு, முனைவர் ஏ.சுப்பராயலு, சமூக விஞ்ஞான இதழின் ஆசிரியர், தேவ.பேரின்பன், வரலாற்று ஆய்வாளர் மற்றும் மக்கள் பதிப்பக உரிமையாளர் முனைவர் மே. து. ராசுக்குமார், பள்ளித்தாளாளர் சி. ஸ்ரீதரன் மற்றும் பெண்ணையாறு தொல்லியல் சங்க நிர்வாகி சுகவனமுருகன் உள்ளிட்டோர் உரையாற்றினார்கள்.

தமிழகத்தில் கல்வெட்டுகளை படியெடுத்து ஆவணமாக்குவதில் உள்ள தொய்வைப் போக்கிட தொல்லியல் அறிஞர்கள் உதவ வேண்டுமென சிறப்பு ஆணையர் வேண்டுகோள் விடுத்தார். இவ்விழாவில் ஆர். மணி எழுதிய "செஞ்சிக் கோட்டை வரலாறு" மற்றும் பேராசிரியர் இராசசேகரதங்கமணி தொகுத்த "தருமபுரி மாவட்டக் கருத்தரங்க மலர்" ஆகிய இரு நூல்களும் சிறப்பு ஆணையரால் வெளியிடப்பட்டன. தொல்லியல் கழகம் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற ஐந்து மாணவர்களுக்கு பரிசுகள் சிறப்பு ஆணையரால் வழங்கப்பட்டன.

செய்தித் தொகுப்பு: **இரா. சிவானந்தம்**
கல்வெட்டாய்வாளர், சென்னை

# Minutes of the Monthly Lecture held on 27-6-2006 in Department of Archaeology, Egmore, Chennai-8

The monthly meeting of Department of Archaeology was held on 27-6-2006 around 4.00 p.m. in Department of Archaeology, Egmore, Chennai-8. The dais was graced by Thiru T.S. Sridhar, IAS., Special Commissioner of Archaeology by presiding the function. Dr.R. Venkatesan & Dr. Sasisekaran scientists from NIOT, Chennai, were the Chief Guests. Scholars, scientists, Government Officials, Staff & Media were the distinguished audience.

The programme started with Tamil Thai Valthu. The Welcome address was given by Thiru K. Sridharan, Registering Officer, Department of Archaeology. He then requested our Special Commissioner to deliver a Power Point Presentation on Excavation carried at Poompuhar by the State Department of Archaeology & Archaeological Survey of India.

Thiru T.S. Sridhar, IAS , Special Commissioner outlined all the details of excavations onshore & offshore of Poompuhar held since 1961. He pointed out that Department of Archaeology was the first department in the country to introduce under-sea excavation at Poompuhar. He visualized through Power Point Presentation the expeditions carried out at Poompuhar with the help of NIO Goa and the fruitful results brought out through the joint venture. He also mentioned that a separate museum is functioning exclusively for antiquities brought to light around Poompuhar. Antiquities like lead ingots, lime stone Buddha which were retrieved from the sea bed were displayed at Poompuhar Museum. While concluding he stessed several points for action in future and mentioned that a preliminary meeting was held on June 14th among different organizations such as Archaeological Survey of India, NIOT, Maritime Board etc. The meeting discussed measures regarding a proposal to be sent to Government for approval for carrying under sea excavations along Poompuhar coast to know further about the submerged port city of Kaveri Poompatinam. In the meantime, on land exploratory work along the river banks of Cauvery has commenced covering the area from Sembiyan Kandiyur to Poompuhar involving departmental field officers.

Dr. R. Venkatesan enlightened the gathering about ocean science and Technology in developing an island. He explained through Power Point presentation the fauna and flora of the sea and about the hot

springs. He talked about the Tsunami effect at Andaman Islands, the socioeconomic and other physiological effects left behind, the change of boundary lines on the sea coast.

Scientist Dr. B. Sasisekaran from NIOT who is engaged in off-shore exploration at Poompuhar explained about the high tech equipments available at NIOT and how it is useful in identifying the objects lying on the sea bed. He also showed the result of recent structural and elongated features along the coastal line. The remains were found at a distance of two km from the shore at a depth of 14 meters to 20 meters. He also mentioned that more surveys should be carried out with high tech equipment in locatingthe position and identifying the structure and trying to salvage the possible.

Then the Power Point Presentation was thrown open to open discussion. Dr.P.Shanmugam Professer, University of Madras wanted to know the exact position of the island which was taken up for surveying by Dr.R. Venkatesan. Scientist, NIOT answered the query. Next Mr. Alok Tripathi was requested by the Special Commissioner to record his comments. He praised the Department of Archaeology for its pioneering efforts in under sea exploration and excavations. He also stressed on rules and regulations to be followed and the guide lines laid by Archaeological Survey of India in carrying out offshore & onshore excavation.

Special Commissioner replied that all the excavation activities are sent to Central Government through State Government in the prescribed format and after the approval all the guide lines are followed and carried out.

The function concluded with vote of thanks delivered by Thiru V. Ramamurthi, Pre-historic Archaeologist, Department of Archaeology.

— **K. Sridharan**
Registering officer, Dept. of Archaeology

# 14 சென்னை அரசு அருங்காட்சியகக் கல்வெட்டுகள்

ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்லியல் அலுவலர், சென்னை

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் கல்வெட்டுப் பிரிவு கூடத்தில் பார்வைக்கு வைக்கப்படாத சில கல்வெட்டுகள் இருப்பு அறைக் கூடத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 10 கல்வெட்டுகள் தற்போது படியெடுக்கப்பட்டுள்ளன.[1] பல்லாண்டுகளுக்கு முன்னதாக இவை அருங்காட்சியகம் வந்தமையாலும் அப்போது இவை கிடைத்த இடங்களின் குறிப்பு சேகரிக்கப்படாமையாலும் அவை எவ்வூரைச் சேர்ந்தவை எனத் தெரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் 9 தமிழ் கல்வெட்டுகள் தமிழ் நாட்டின் வடபகுதியைச் சேர்ந்தவை என்றும் வட்டெழுத்தில் உள்ள ஒன்று தென்பகுதியைச் சேர்ந்தது என்றும் ஊகிக்கலாம்.

இக்கல்வெட்டுகளில் தொன்மையானது பல்லவர் காலத்திய தமிழ் எழுத்துக் கல்வெட்டாகும். மேல்பகுதி சிதைந்துள்ள இது நிருபதுங்கன் அல்லது நந்திவர்மனுடையதாகலாம். இதன் வாசகம் 14 வரிகளில் பின்வருமாறுள்ளது.

> ". . . . ய நிரு . . . . மபருமற்குயா . . . த்(ெ) தெட்டாவதும் . . . . ள நல்லூர்த் தளி எடுப்பித்தாள் ஆலிநாட்டு ஆலஞ்சேரி(ச்) இருந்து வாழுஞ் சேந்தி மகள் நங்காளி அக்கன் இவள் திருவமுது கு வைத்த போகம் காவிதிப்பட்டிச் சின்னசருமன் கூறும் சோமாசி பெருமாள் கூறும் நந்தவானம் சித்திரை(த்திங) திருவாதிரை விழாச் செய்ய வைத்தாள்"

பெண்ணின் கொடை சொல்லும் கல்வெட்டு இது. ஆலிநாட்டு ஆலஞ்சேரி[2] என்ற ஊரில் வாழும் சேந்தி மகள் நங்கை காளி அக்கன்[3] என்பவள் . . ள நல்லூரில் கோயில் (தளி) எடுப்பித்து அங்கு வழிபாட்டிற்குரிய படையல்கள் (திருவமுது) வைத்திடவும் நந்தவனம் அமைக்கவும், சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திர நாளில் திருவிழா நடத்திடவும் நில வருவாயாக சின்ன சருமன், சோமாசி பெருமான் என்ற இருவரது பங்கு (கூறு) நிலங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளாள் என்பது இக்கல்வெட்டின் செய்தியாகும்.

அடுத்தகல்வெட்டு முதலாம் இராசராச சோழனின் 13 அல்லது 19-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 998 (அ) கி.பி. 1004) கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் பின்பகுதி இல்லை. முதல் 13 வரிகளில் இவனது மெய்க்கீர்த்திப் பகுதி உள்ளது. கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போல - ஸ்ரீகோ இராசகேசரி
பந்மரான ஸ்ரீராசராச தேவற்கு யாண்டு
௧௩ ஆவது வெண்குன்றக் கோட்டத்து தென்னூர்
நாட்டு இலங்காட்டுரோமெங்களூர் மாதேவர்
போ[ழ]ன் குமாரச் செறுவில் நாங் . . . கா நிற்க
கொள்ளும் வா . . . ணத்துக்கொள்ள . . .

வெண்குன்றக் கோட்டத்துத் தென்னூர்நாட்டு[4] இலங்காட்டுரைச் சேர்ந்தோர் அவ்வூர் மகாதேவர்க்கு நிலம் தொடர்பான கொடை ஒன்று தந்தமை பற்றிய குறிப்பு இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

காலத்தால் அடுத்துவரும் தமிழ்க் கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழனுடையதாகும் (கி. பி. 1178-1218). இக்கல் வெட்டும் சிதைந்துள்ளது. சிதைந்துள்ள மெய்கீர்த்திப் பகுதி ஆறு வரிகளில் உள்ளது. அடுத்துள்ள மூன்று வரிகள் பின்வருமாறு:

. . . ந்தருளிய கோவிராஜகேசரிவந்மரான
திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க
சோழ . . . ஜனநாதபுரத்து ஆளுடையார்
திருமுதலீஸ்வரமுடை . . . வேண்டும் நிமந்
தங்களுக்கு நிலங்கொள்ள இக்கோயிலில் . . .

ஜனநாதபுரத்து இறைவன் திருமுதலீச்வரமுடையாரது வழிபாட்டிற்கான நிலக்கொடை தொடர்பான கல்வெட்டாகும்.

அடுத்ததாக 13, 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு தொடக்கம் இறுதி இல்லாத கல்வெட்டினைக் குறிப்பிடலாம். கிடைத்துள்ள 23 வரிகளில் பின்வரும் வாசகம் உள்ளது

. . . கோட்டத்து ஓகவலநாட்டு பெருங்காஞ்சி
கீழ்பிடாகையான அடகுவூர் திருத்தணி
யற் திருமலைமேலெழுந்தருளி நிற்கு[ம்]
ஸுப்ரஹ்மண்யயற்கு அவியூராக
கொண்டுவிட்டேன் கண்டிநக்கையேன்
இத்த[ன்ம]மிறக்குவான் மங்கை இடை
குமரியிடைச் . . .

திருத்தணி திருமலைமேல் உள்ள சுப்பிரமணியசுவாமிக்கு கண்டி நங்கை என்ற பெண் ஓகவலநாட்டு பெருங்காஞ்சியின் துணைக் கிராமமான (பிடாகை) அடகுவூர் என்ற ஊரினை படையல் மற்றும் வழிபாட்டிற்கான ஊராக (அவியூர்) கொடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

அடுத்துச் சற்று முழுமையாக உள்ள கல்வெட்டு விஜயநகரர் காலக் கல்வெட்டாகும். 12 வரிகளில் உள்ள அக்கல்வெட்டின் முழுமை யடையாத வாசகம் பின்வருமாறு:

'சாதாரண வருஷ௳ சித்[திரை] திரையோ
தெசி னாள் ராசாதிராச ராசபரமேஸ்வ
ரஹா பிரதாப ஸ்ரீ வேங்கட்டபதிராயர்
அய்ய தேவமகாராயர் அய்ய அவர்கள்
நின்றையில் நின்ற பெருமாளுக்கு
பரிகவத்துக்கு விட்ட மான்ய விபரம்
ஏரிக்கீழ்த் தோப்புக்குக் கிழக்கு பெண்கள்
கோயில் தெ . . ."

கி.பி. 16, 17 - ஆம் நூற்றாண்டில் முதலாம் வேங்கடபதி (கி.பி. 1586-1614) என்ற விஜயநகர மன்னன் காலத்தில் சாதாரண வருடம் கி.பி. 1610-ல் வருவதால் இக்கல்வெட்டு அவரது காலத்திய தாகலாம். அவரது பிரதிநிதியான அய்யதேவமகாராயர் என்ற நாயக்கர் நின்றையூர் (திருநின்றவூர்) பெருமாளுக்கு வேண்டிய பூசை பாத்திரங் களுக்காக (பரிகலம்) ஏரிப்பாசனத்தில் தோப்புக்குக் கிழக்காகவும் சப்தமாதர் கோயிலுக்கு (பெண்கள்கோயில்) தெற்காகவும் இருந்த ஒரு குறிப்பிட்ட நிலத்தைக் கொடுத்ததைக் இக்கல்வெட்டு குறிக்கின்றது.

பிற நான்கு கல்வெட்டுகள் துண்டுக் கல்வெட்டுகளாகும். அந்த நான்கு கல்வெட்டுகளின் வாசகங்கள் பின்வருமாறு:

அ. " . . . , ற்கு ஒலியூரிலிருக்கும் பரகேஸரி முத்தரையனுடப் பொன்னாக . . . டி நங்கையேன் அ குவ ரை . . . பசு கொன்றபாவம் படுவான்"

ஆ. "யாண்டு உ௧ ஜயங்கொண்ட சோழ மண்டலத்து . . . விலையும் பொறை இட்டு மணறக்கொண்டு இராஜா விறையுமிச்ச . . ."

இ. ". . . யுந் தீட்சையுங் கோஸ . . வெண் குன்றக் கோட்டத்து . . . வூர் வெள்ளாளன் செட்டி[பு]கழனும் . . ."

ஈ. " . . . . ாம் திருனாள் திருப்பபண்க்கு நடத்த கடவதாகவும் யாதொருத்தர் யிந்த பலநுக்கு ஆசைதால் காசியிலே காராம் பசுவை கொன்ற தோஷத்திலே போகடவது கெங்கை கரையிலே தாங்கள் தாய் தகப்பனையும் தங்கள் குருககலைக் கொன்ற பாவத்திலே போக கடவராகவும்."

மேலே கண்ட தமிழ் எழுத்துக் கல்வெட்டுகள் தவிர ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டும் இங்குள்ளது. இக்கல்வெட்டும் துண்டுக்கல்வெட்டாகும். எனினும் சிறிய எழுத்துக்களில் 16 வரிகள் உள்ளன. மன்னன், ஊர், கோயில் பெயர்கள் கிடைக்கவில்லை. கி. பி. 9-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ள இக்கல்வெட்டு ஒரு குறிப்பிட்ட கோயிலுக்கு வேண்டிய பரிகலன்கள், பணியாளர்கள், படையல் பொருள்கள் ஆகியவற்றின் நீண்ட பட்டியலை குறிப்பிடுகின்றது.[3]

**அடிக்குறிப்புகள்**

1. அருங்காட்சியகத்தில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுக்கவும் படியெடுத்தபின் படித்து கட்டுரை எழுதவும் ஆணையிட்ட சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர். இ.ஆ.ப. அவர்களுக்கு நன்றி. கல்வெட்டுகளைப் படியெடுத்துக் கொள்ள அனுமதி வழங்கிய அரசு அருங்காட்சியக முன்னாள் இயக்குநர் திரு. சித்திக் இ.ஆ.ப. அவர்களுக்கும் உடனிருந்து உதவிபுரிந்த காப்பாட்சியர் திரு. பாலசுப்பிரமனியத்துக்கும் நன்றி. சிறந்த முறையில் கல்வெட்டு களை படியெடுத்த இளநிலை கல்வெட்டாய்வாளர் திரு. மே. சீனிவாசன், கல்வெட்டுச் சிற்றெழுத்தர்கள் திரு. முருகேசன் திரு. மதிவாணன் திரு. ஜோதி ஆகியோருக்கு நன்றி.

2. 'யநி . . . ரும' என்றிருப்பதால் மன்னன் பெயரில் ஐய்யப்பாடு ஏற்படுகிறது. கல்வெட்டில் காவிதிப்பட்டி இடம் பெறுகிறது. வாலாஜாபேட்டைக்கு வடக்கில் நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள காவேரிப்பாக்கம் என்ற ஊர் முற்காலத்தில் காவிதிப்பாக்கமாக வழங்கப்பட்டுள்ளது. இதனிலும் காவிதி என்ற சொல் இடம் பெறுகிறது. ஏனாதி போல் காவிதி ஒரு பட்டப்பெயராகும்.

3. நங்கை காளி அக்கன் என்ற பெயர் குறிப்பிடத்தக்கதாகும். முதலாம் இராசராசன் தன் தமக்கையாரைக் குறிப்பிட அக்கன் என்ற சொல்லைப் பயன்படுத்தியதைத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகளின் மூலம் அறிகிறோம். தேவரடியார் சிலருடைய பெயர்களுடன் நக்கன் என்ற பின்னொட்டுகள் கல்வெட்டுகளில் வந்துள்ளன. எனவே அன் விகுதி ஆண்பாலுக்கு மட்டுமின்றிப் பெண்பாலுக்கும் பல்லவர் காலம் தொடங்கி இருந்து வந்துள்ளது எனலாம். இக்கல்வெட்டில் இடம்பெறும் ஆலிநாடு, தொண்டை நாட்டில் இருந்த 79 நாடுகளின்

பட்டியலில் இடம்பெறவில்லை. இந்த ஆலி நாட்டில் ஆலஞ்சேரி என்ற ஊர் இருந்துள்ளது. உத்திரமேரூர் வட்டம் குன்னத்தூர் உள்வட்டத்தில் ஆலஞ்சேரி என்ற பெயரில் ஓர் ஊர் தற்போதுள்ளது.

4. ஆட்சி ஆண்டு 13 போலவும் 19 போலவும் உள்ளது. எனவே கி.பி. 998 அல்லது 1004-இல் வெட்டப்பட்டதாகும். சிவன்கோயில் திருப்போன கத்துக்குப் போழன் குமாரச் செறு என்ற நிலம் வழங்கப்பட்டுள்ளது.

5. திருத்தணிச் சுப்பிரமணியருக்கு செப்புப்பட்டயங்கள் இரண்டின் மூலம் கம்பவர்மன் மகன் அபராஜிதன் மற்றும் ஆதித்தசோழன் மகன் முதலாம் பராந்தகன் ஆகியோருடைய கொடைகளைக் காண்கிறோம். பெருங்காஞ்சி என்ற ஊர் வாலாசாப்பேட்டை நெடுஞ்சாலையில் உள்ளது.

6. திருநின்றவூர் நின்றை எனச் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளது.

7. திருநாள் திருப்பணி என்பதால் திருவிழாவிற்காக வழங்கப்பட்ட கொடை எனலாம்.

8. பள்ளி என்ற சொல் வருவதால் சமணக் கோயிலுக்கு வழங்கிய கொடையாக இது இருக்கலாம்.

## சிறுசெந்தில் - சிறுசெந்தூர் - சிறியந்தூர்

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டத்தில் சிறியந்தூர் என்ற சிற்றூர் உள்ளது. இவ்வூர் சிவன் கோயிலில் தற்பொழுது 10 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தொன்மையானது ஸ்ரீவல்லபபாண்டியனின் (கி.பி. 1133) கல்வெட்டாகும். இக்கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் அமிர்தகுண வளநாட்டுச் 'சிறுசெந்தில்' என்றும் 'சிறுசெந்தூர்' என்றும் காணப்படுகிறது. சிறப்புமிக்க திருச்செந்தூர் ஊர்ப்பெயரிலிருந்து வேறுபடுத்திக்காட்ட 'சிறு' என்ற சொல் சேர்க்கப்பட்டு இவ்வாறு வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இன்று சிறியந்தூர் என மருவி வழங்கப்படுகிறது. இறைவனின் பெயர் 'புரவரீசுவர முடையார்' என்பதாகும். 'புரவு வரி', 'புரவுவரி திணைக்களம்' என்பவை இடைக் காலத்தில் நிலவரி மற்றும் நிலவரி தொடர்பான அரசுத் துறை தொடர்பானவை யாகும். இறைவன் பெயர் புரவுவரி தொடர்பாக அமைந்திருப்பது சிறப்பாகும்.

தகவல்: செ. உலகையா
தொல்லியல் துறை, திருநெல்வேலி

# திருப்புலிவனத்தில் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் கண்டுபிடிப்பு

15

முனைவர் ஆ பத்மாவதி
கல்வெட்டாய்வாளர், சென்னை

உத்திரமேரூர் அருகே திருப்புலிவனத்திலுள்ள வியாக்ரபுரீஸ்வரர் கோயிலில் உள் பிரகாரத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர் திரு. இரகுராமன் தனது இறுதித் தேர்வு ஆய்வு நூல் தொடர்பான ஆய்வில் கண்டறிந்துள்ளார்.

அக்கோயிலின் உள் பிரகாரத்தில் திருச்சுற்று மாளிகையின் மூன்று பக்கச் சுவர்களிலும் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததும் பின்னர் அதன் மேல் சுண்ணாம்பு பூசப்பட்டு மறைந்தும் பொறிந்தும் சிதைவுண்ட பின் ஆங்காங்கே துண்டு துண்டாக காட்சியளிப்பதும் தற்சமயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. சுவரில் சுதை பூசி அதன் மேல் கோட்டுருவங்கள் வரைந்த பின் பச்சை. சிவப்பு, வெள்ளை வண்ணங்களால் ஓவியங்களை வரைந்துள்ளனர்.

இந்த ஓவியங்களில் முனிவர்கள், கடவுளர்களின் உருவங்கள், அழகிய கரண்டகிரீட, ஜடா மகுடங்களுடன் கூடிய கடவுள்களின் உருவங்கள், நடனக் காட்சிகள், மத்தளம், சங்கு போன்ற இசைக்கருவிகள் வாசிக்கும் கலைஞர்கள், திரிபுராந்தகரின் அழகிய மிகப்பெரிய தேரின் காட்சி, கருவூராரும், ராஜராஜனும்' என்று பரவலாக மக்களால் கூறப்படும் தஞ்சை பெரிய கோவில் ஓவியம் போன்ற பல காட்சிகள் தஞ்சை பெரிய கோயில் சோழர் கால ஓவியத்தை ஒத்த சாயல்களுடன் காட்சியளிக்கின்றன.

சுவர்களின் கீழ்ப் பகுதியில் குடம் போன்ற பாத்திரங்கள் தெற்கு பக்கச் சுவரிலும் இயற்கை காட்சிகளான மிருகங்கள், தாமரைக்குளம் போன்ற காட்சிகள் வடக்கு பக்கச் சுவரிலும் காணப்படுகின்றன.

இக்கோயிலில் பல்லவர், இராட்டிரகூட மன்னர், முற்காலச் சோழர் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை கட்டடப் பகுதிகளில் இல்லை. கருவறை கட்டடப் பகுதியில் முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகள் உள்ளன. ஓவியங்கள் உள்ள திருச்சுற்று மாளிகையை திருவொற்றியூரில் உள்ள முதலாம் இராசேந்திர சோழன் காலத் திருச்சுற்று மாளிகையை ஒத்துள்ளது. எனவே முதலாம் இராசராசசோழனின் இறுதி மற்றும் முதலாம் இராசேந்திர சோழனின் ஆட்சித் தொடக்கத்தில் இவ்வோவியங்கள் வரையப்பட்டன என்று கருதலாம்.

# 16 கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேட்டின் ஒரு தவறான கருத்துக்கு மறுப்பும் குடும்பர் பற்றிய தொல்லியல் சான்றுகளும்

முனைவர். குருசாமி சித்தர்
கோயமுத்தூர்.

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, அதன் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் அவர்களைப் பதிப்பாசிரியராகவும், அந்தத் துறைசார்ந்த திரு. ர. பூங்குன்றன், திரு. பெ. கௌதமபுத்திரன் ஆகியோரை உதவிப் பதிப்பாசிரியர்களாகவும் கொண்டு கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேடு என்ற நூலை சென்ற 2005-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

அக்கையேட்டில் பக்கம் 20-இல் எந்தவித ஆதாரத்தையும் காட்டாமல் ''கிழார் என்ற பட்டம் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தமையாலும் காவிதி, குடும்பி போன்ற பட்டங்கள் தமிழகத்திற்கு வெளியிலிருந்து வந்தவர்கள் கொண்டு வந்தமையாலும் அப்பட்டங்கள் தமிழ்க்குடித் தலைவர்களிடம் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை'' என்று கூறுகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். தொல்லியல் துறையைச் சேர்ந்த இந்தப் பதிப்பாசிரியர்கள் கீழ்கண்ட சான்றுகளைக் காணத் தவறிவிட்டனர் போல் தோன்றுகிறது.

1. எட்டு - ஒன்பதாம் நூற்றாண்டுத் திவாகர நிகண்டு ''ஊரன், மகிழ்நன், கிழவன் என்று இவை சாலிமருதத் தலைமகன் பெயரே'' என்று வரையறை செய்கிறது. சங்க நூல்களில் இச்சொற்கள் பரவிக் கிடக்கின்றன. கிழவன், கிழார், மள்ளர், குடும்பர் ஆகியோர் மருதநிலத் தலைமக்கள். இடைக்காலத்தில் கொங்கு நாட்டை ஆண்ட கொங்குச் சோழர், கொங்குச் சேரர், கொங்குப் பாண்டியர் மருதநிலத் தலைமக்கள் ஆவர். கொங்கு நாட்டிலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் மருதநில மக்களே இல்லை என்பது போல் அம்மக்களைக் குறிப்பிட இக்கையேடு தவறியுள்ளது.

குடும்பி என்ற பட்டம் குடும்பர், மள்ளர் எனும் தேவேந்திர வம்சத்தைச் சேர்ந்த தேவேந்திர குல வேளாளர்களின் பட்டம்.

குடுமி, குடுமிச்சி, குடும்பி, குடும்பியர், குடும்பிச்சி, குடும்மி குடும்பக்கமார், குடும்பிய குலம், குடும்பிகன், குடு(ம்)பர், குடுமர், குடும்பன், குடும்பர், குடும்பமார், குடும்பகள் என்ற பல பாடங்களில் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் இச்சொல் பல இடங்களில் வருகின்றது.

2. குடும்பன் என்ற சாதிப் பெயர் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் செட்டியூல்டு சாதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. வேள்விக்குடிச் செப்பேட்டில் குறிப்பிடப்படும் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனும் பாண்டிய வேந்தரை முதுகுடுமி என்பது முதுகுடும்பன் எனப்பொருள்படும். முதுகுடுமி என்பது முது தலைமுடி என்று பொருள்படாது. புறநானூறு பாடல்கள் 12, 6, 64 ஆகியவற்றில் குறிப்பிடப்படும் குடுமி இந்தப் பாண்டிய வேந்தனே ஆகும். தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் பாடல் 68 குறிப்பிடும் குடுமி மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் குடுமிகளைந்த புகழ் சாற்றுநிலை என்ற துறையில் குறிப்பிடப்படும் குடுமி, வேந்தர் களையும் அரசர்களையும் தலைவர்களையும் இறைவர்களையும் குறிப்பிடும் (தலைமுடியை அல்ல).

4. திருநெல்வேலி மாவட்டம் சங்கரநயினார் கோயிலில் உள்ள கல்வெட்டொன்று ‘முன்பு துவாபர யுகத்தில் தேவேந்திரக் குடும்பன் நெல், கரும்பு, வாழை, பனை முதலிய வித்துக்களை தேவலோகத்தி லிருந்து பூமிக்குக் கொண்டுவந்து (கண்டுபிடித்து) பன்னீராயிரம் கிணறுகள் வெட்டி பாசன வசதி செய்து பயிர் செய்தார்’ எனக் கூறுகிறது. (தென்னிந்திய கோயில் சாசனங்கள் பாகம் II. எண் 869, பக்கம் 803).

5. சங்க காலத்தைச் சேர்ந்த கேரள மாநிலம் எடக்கல் குகைக் கல்வெட்டு (இந்திய தொல்லியல் துறை ஆண்டு அறிக்கை 1897, பக்கம் 120-123, E.HULTZSCH) சேரர், குடும்பிய குலத்தினர் எனக் கூறுகிறது.

விஷ்ணு வர்ம்ம குடும்பிய குல வர்த்தநஸ்ய லிகித

குடும்மி புத சேர

என்பதாகும் அதன் வாசகம். சேர வேந்தன் குடும்பிய குலத்தவன் என்று கூறுகின்றது.

6. மதுரை திருப்பரங்குன்றம் சமணர் குகைக் கல்வெட்டு
எருக்காட்டூர் இள குடும்பிகன் போலாலயன் செய்த
ஆய்சயன நெடுஞ்சாதனம்

எனக் குடும்பிகன் பற்றிக் கூறுகிறது.

7. சிவத்தெழுந்த பல்லவராயன் உலா (கல்வெட்டு இதழ், முனைவர் இரா. நாகசாமி) குடுமியான் மலை சிவபெருமானை இனக்குடுமி என்றே குறிப்பிடுகிறது. குடுமி என்பது ஒரு இனம் என்று கூறப்படுகிறது. பள்ளு நூல்கள் இவர்களை குடும்பர், மள்ளர், பள்ளர், தேவேந்திரர், பண்ணாடி எனக் கூறுகின்றன.

8. கோயமுத்தூர் மாவட்டம் செலக்கிரிச்சல் கல்வெட்டு : ''ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம தேவற்கு யாண்டு ஏழாவது இக்கோயில் வாகணையும் பொங்கலூர்கால் நாட்டுக் கீரனூரில் இருக்கும் ஐங்கைக் குடுமிச்சிகளில் சோழன் உமையான அனுத்திரப் பல்லவரசி தந்மம்'' எனக் குடுமிச்சி அரசியைக் குறிப்பிடும் (மள்ளர் மலர், மே 2002). இவர் சோழர் பரம்பரையில் வந்தவர் எனக் குறிப்பிடுகிறது.

9. ஈரோடு மாவட்டம் குண்டடத்தில் உள்ள கல்வெட்டு : ''ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு பதினொன்றாவதுக் கெதிராவது பொங்கலூர்கா நாட்டின் குண்டொடத்திற் குடுமிச்சி களில் சிங்கன் கோவியாந அங்கராயன் மனைக்கிழத்தி குண்டொ டத்தில் வடுகப் பிள்ளையார் கோயிலுக்கு சந்தியா தீபமொன்றுக்கு ஒடுக்கின அச்சி பலஞ்சலாக...'' அரசனான அங்கராயன் குடுமிச்சி குலத்தைச் சேர்ந்தவன் என்று கூறுகிறது. (ARE 1919-20, மள்ளர் மலர், நவம்பர் 2004).

10. புதுக்கோட்டை சமஸ்தான பழங் கல்வெட்டுகள் எண் 349, பக்கம் 222-223 திருக்குடுமி வயிராகிக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் பற்றிக் கூறுகிறது. மேற்படி நூலில் எண் 410, பக்கம் 285 ஒரு ஆவணத்தை குடுமியார் எழுதியது பற்றிக் கூறும். தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, தொடர் எண் 35/1978 குடந்தை கல்வெட்டுகள் முதல் தொகுதியில் 'குடும்பி காட்டுக்காறக் குடும்பி' என்ற சொற்றொடர் வருகிறது.

மேலும் கோயமுத்தூர் மாவட்டத்தில்

11. பொங்கலூர்க்கா நாட்டு கீரனூர் குடுமரில் (குடும்பரில்) சுந்தன் அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்கோளன் திருவாகீசுவரமுடையார்க்கு நட்டுவப்புறத்துக்கு விட்ட நீர்நிலம் பற்றிக் கூறுகிறது. (S.I.I. தொகுதி 5, எண் 266).

12. கண்ணாடிப்புத்தூர் கல்வெட்டு தென்குடும்பரில் சிங்கன் சோழனான அணுத்திரப் பல்லவரையன் திருவனந்தீசுவரமுடையார் கோயிலுக்கு நிலம் விட்டது பற்றிக் கூறுகிறது (S.I.I. தொகுதி 26, எண் 223).

13. கோயம்புத்தூர் பேரூர் பட்டி மள்ளர் கோயிலுக்கு தென் வழிநாட்டு ஏழூர் 'ஊராளி தென் குடு(ம்)பரில் சிங்கன் சோழனான அணுத்திரப் பல்லவரையன்' நந்தவனம் ஏற்படுத்தி அதன் காவலருக்கு நிலம் அளித்தது பற்றிக் கூறுகிறது. (S.I.I. தொகுதி 5, எண் 240).

'கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் கோயம்புத்தூர் மாவட்டம்' எனும் முனைவர் மா.கணேசன், திரு.இரா.ஜெகதீசன் ஆகியோரின் நூலில் வந்துள்ள கல்வெட்டுக்கள்:

14. கல்வெட்டு எண் 193: கரைவழிநாட்டு ஏழூர் தென்குடுமரில் (தென்குடும்பரில்) 'ஆரியன் உலகுய்ய வந்தானான வீரராசேந்திர அணுத்திரப் பல்லவரையன்' கோயிலுக்கு நிலம் விட்டது பற்றிக் கூறுகிறது. கல்வெட்டு எண் 189: மேற்படி ஆளுநரை 'கீரனூர் முதலிகளில் யாழ்வல்லான் பாண்டியனான வீரராசேந்திர அணுத்திரப் பல்லவரையன்' எனக் கூறும். இவர் பாண்டியர் பரம்பரையில் வந்தவர் என்கிறது.

15. தென்குடும்பர் எனப் பிற கல்வெட்டுக்களில் கூறப்படும் இளங்கோளர் கொடை பற்றி கல்வெட்டு எண் 8, 165, 188, 197 கூறுகின்றன.

16. கல்வெட்டுக்கள் 116, 152 ஆகியன 'மல்லி கேசி, வலரி பூமன்நம்பி மணவாட்டி சோழன் உமை' பற்றிக் கூறுகின்றன. வலரி என்பது தேவேந்திரரின் வேறு பெயர்.

17. நூலில் கல்வெட்டு எண் 103 அன்னூர் மன்னீசுவரர் கோயிலுக்கு 'பெருமாள் முதலிகளில் வல்லங்கிழான் மல்லன் அழகிய சிற்றம்பலமுடையானான முனையதரன்' கொடை அளித்தது பற்றிக் குறிப்பிடுகிறது.

18. நூலில் கல்வெட்டு எண் 162: கொங்குச் சோழர் வீர சோழன் கோனாட்டான் எனக் குறிப்பிடப்படுகிறான். கோனாட்டார் என்பது இருங்கோளர்களைக் குறிக்கும். கல்வெட்டுக்களில் இருங் கோளர்கள் தென்குடும்பர் எனக் கூறப்படுகிறார்கள். கீரனூர்

கல்வெட்டு (S.I.I 5/278) நட்டுவப்புறமாக கோயிலுக்கு 'நிலம் கொடை அளித்தவர் குடுமரில் (குடும்பரில்) சுந்தன் அதிசய சோழனான குலோத்துங்க சோழ இருங்கோளர் என்கிறது.

19. நூலில் கல்வெட்டுக்கள் 169, 10, 23, 69, 288, 369, 16 முதலியன் அணுத்திரப் பல்லவரையர், தேவேந்திரப் பிச்சன், தேவேந்திரப்பன், உத்தம சோழர் முதலீயோர் குறிப்பிடப்படு கின்றனர்.

20. சங்க காலத்தைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டைக் குறிப்பிடும் பதிப்பாசிரியர்கள், குடும்பியர் வழியல்லது வேறொருவர் குடும்பாடக் கூடாது என்ற அரசனின் ஆணையை குறிப்பிட மறந்து விடுகின்றனர். தேவகுலத்தை ஏற்படுத்தி நிர்வகிக்கிறவர்கள் குடும்பியர் என இக்கல்வெட்டு காட்டுகிறது. இக்குடும்பியர் குலத்தவர் தான் பரம்பரை பரம்பரையாக கோயிலை நிர்வகிக்க வேண்டும் என அரசரின் ஆணை கூறுகிறது.

21 கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சுந்தரர் பேரூர் வந்தபோது பட்டி மள்ளர் உழவுத் தொழில் செய்வதற்காக பேரூர் வயலில் பள்ளர், பள்ளிகளுடன் சென்று உழுது நடவு செய்து கொண்டிருந்தார் எனப் புராணம் கூறும். பேரூர் சிவனைப் பட்டி மள்ளர் என்றே கவிராக்ஷச கச்சியப்ப முனிவரின் பேரூர்ப் புராணம் கூறும். வையாபுரிப் பள்ளு சிவனைக் குடும்பன் என்றே கூறுகிறது. கோவை மாவட்டத்தில் நொய்யல் ஆறு மற்றும் அமராவதி ஆற்றங்கரை ஊர்களில் மருத நாகரிகம் தோன்றியது. இதன் கரைகளில் உள்ள ஊர்களில் மள்ளர், குடும்பர் எனப்படும் தேவேந்திரர் பெருமளவில் வாழ்ந்து வருகிறார்கள். சங்க காலத்தில் ரோமபுரிக் காசுகளும் பிற காசுகளும் இந்நதிக்கரை களிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. மருத நாகரிகம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கோவை மாவட்டத்தில் உள்ளது. டாக்டர் நாகசாமி 'புதிய கற்காலத்தில் உழுது பயிர் செய்கிற தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தவர்கள்' மள்ளர் எனக் கூறுவார் (மள்ளர் மலர், டிசம்பர் 2001). இதுதான் புதிய கற்காலப் புரட்சி என்பார்.

22. கையேடு முக்கியமான கி.பி. 1528 ஆண்டைச் சேர்ந்த பழனி தேவேந்திர வம்சத்தார் செப்பேட்டில் உள்ள செய்திகளைக் கண்டுகொள்ளவில்லை. தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டம்

உட்பட அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 120 குடும்பகள் உள்ளிட்ட தேவேந்திர வம்சத்தார் (குடும்பகள், பன்னாடிகள், காலாடிகள், மூப்பன் பலகாரனென்கிற அய்ந்து வகுப்பும் பன்னீறாயிரம் கோத்திர முடைத்தாகிய) கூடி பழனியில் தேவேந்திர விநாயகனையும் தேவேந்திர மடத்தையும் உண்டுபண்ணி பழனி முருகனுக்கு விழாக்கள் நடத்த வரி வழங்குவது பற்றி முடிவெடுத்துள்ளனர். தேவேந்திர வம்சத்தாருக்கு இருந்த பல பெருமைமிக்க மெய்க் கீர்த்திகளையும் வரலாறுகளையும் விவரிக்கிறது. நெல்லைக் கொண்டு வந்த செய்தி, வேந்தர்கள் குடும்பர்களுக்கு இணை முடி தரித்த செய்திகளும் இதில் உள்ளன.

குடும்பியர், குடும்பர் மள்ளர் எனப்படும் தேவேந்திர குல வேளாளர் மூத்த தமிழ்க்குடி என்பது மேலே குறிப்பிட்ட முதல்தரச் சான்றுகள் மற்றும் இதர சான்றுகளுடன் உறுதியாகிறது. தமிழ்நாடு தொல்லியல் துறை கோயமுத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேட்டில் கூறிய தவறான கருத்துக்களை மாற்றிக் கொண்டு சரியான சான்றுகளுடனான செய்திகளை வெளியிட வேண்டும்.

**மேலும் இது பற்றிய பல தொல்லியல் செய்திகளுக்கு**

1. சேர சோழ பாண்டிய மூவேத்தர் மரபினரின் அடையாளங்கள்- முனைவர் குருசாமி சித்தர், 2005.

2. தமிழ் இலக்கியத்தில் பள்ளர் (மள்ளர்) தேவேந்திர குல வேளாளர் (அடிப்படைச் சான்றுகள்) - 1993, முனைவா குருசாமி சித்தர்.

3. தேவஆசிர்வாதம அவர்களின், 1. மூவேந்தர் யார், 2. வேளாளர் யார், 3. பள்ளர் அல்லர் மள்ளர் ஆம் மன்னர்


4. மள்ளர் மலர் தொகுதிகள் 4 முதல் 11 (1998-2005).




1




2



3



4



5



6


1. சிறுவாக்கம்–பக்கம் : 1; 2. அனந்தமங்கலம்–பக்கம் : 10; 3. ஒடுக்கத்தூர்–பக்கம் : 11;
4. மதுராந்தகம்–பக்கம் : 8; 5. திருப்பாலைப்பந்தல்–பக்கம் : 9; 6. திருக்கச்சூர்–பக்கம் : 13.



1



2



3

1. கோட்டைப்பட்டி—பக்கம் : 22, 2. ரிஷிவந்தியம்—பக்கம் : 2–3,
3. மல்ல சமுத்திரம்—பக்கம் : 5–6.